# இயேசுவே வாரும்

காலேப் யோசுவா
செல்: 9444701953
E-mail: brocalebjoshua@gmail.com

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி.22.20

எண்: 11/2 மாடி, பெரியார் நகர், E. B. எதிர்
சென்னீர்குப்பம், பூந்தமல்லி போஸ்ட், சென்னை - 600056

## ஜென்மசுபாவமான மனுஷன் - Natural Man

## மாம்சத்துக்குரிய மனுஷன் - Carnal Man

## ஆவிக்குரிய மனுஷன் - Spiritual Man

1. பிரியமானவர்களே, மனுஷரால் அல்ல, மனுஷர் மூலமாயும் அல்ல, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக, சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய காலேப் யோசுவா, கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறதாவது : நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2. தலைப்பிற்கண்ட மூன்று விதமான சுபாவங்களையுடைய மனிதர்களைக்குறித்து தியானிக்க நான் தெரிந்துக்கொண்ட வேதப்பாடப்பகுதி 1கொரி.2:11 முதல் 3:1 வரை அடங்கியிருக்கிறது. இங்கு ஜென்மசுபாவமான மனுஷன் மற்றும் ஆவிக்குரிய மனுஷன் குறித்து 2-ம் அதி 14-ம் வசனத்திலும், மாம்சத்துக்குரிய மனுஷன் குறித்து 3அதி 1-ம் வசனத்திலும் காண்கிறோம்.

3. வானமும் பூமியும் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்ட நாளில் தேவன், தமது சாயலாகவும், தமது ரூபத்தின்படியேயும், மனுஷனை ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார். தேவனுக்குள் அவரது மணவாட்டி இருந்தது போன்று, ஆதாமுக்குள் அவனது மணவாட்டி இருந்தாள். தேவன் கல்வாரியில் தமது விலாவிலிருந்து தமது மணவாட்டியை வெளியே எடுத்தார். அதுப்போன்று ஆதாமின் விலாவிலிருந்து அவன் மணவாட்டியை வெளியே எடுத்தார். இவர்களை பலுகி பெருகி, பூமியை நிரப்பி அதைக்கீழ்படுத்தி சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்து பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுக்கொள்ளுங்கள் என்று சொல்லி ஆசீர்வதித்தார்.(ஆதி.1:28) இவர்களுக்கு ஆகாரமாக பூமியின் மேல் எங்கும் விதைதரும் சகலவித பூண்டுகளையும், விதைதரும் கனிமரங்களாகிய சகலவித விருட்சங்களையும் கொடுத்தார். (ஆதி.1:29) தேவன் தாம் உண்டாகின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது.(ஆதி.1:31) மனிதன் பூமியின் மண்ணினால் தன் ஜென்ம சரீரத்தைப்பெற்று, தேவனுடைய ஆவியும் அந்த ஆவியின் சுபாவத்தையுடைய ஜீவாத்துமாவானான். தேவனுடைய சாயல் வானத்திற்குரிய மேனி. தேவனுடைய ரூபம் பூமிக்குரிய மேனி. ஆவிக்குரிய சரீரத்தில் இருந்த மனுஷன் தன் ஆவிக்குரிய சுபாவத்தை வெளிப்படுத்த மாம்சசரீரத்தில் ஜீவாத்துமாவானான். (1கொரி.15:42,44,ஆதி.2:7) ஆதாம், ஏவாளிடம் மாம்சத்தின் இச்சையோ, கண்களின் இச்சையோ, ஜீவனத்தின் பெருமையோ இல்லாதிருந்தது. ஏனென்றால் இந்த மூன்று இச்சைகளும் பிதாவினால் உண்டானது அல்ல, மாறாக இவைகள் உலகத்தினால் உண்டானவைகள்.(1யோ.2:16) ஆதலால் ஆதாம் வார்த்தையைக்கொண்டு, தன் மனைவியாகிய ஏவாளின் கர்ப்பத்தில் குழந்தைகளை பிறப்பிக்க வேண்டியவனாக இருந்தான். ஆண் பெண் சேர்க்கையில்லாமல், ஏவாள் குழந்தைகளை பிறப்பிக்க வேண்டியவளாக இருந்தாள். அதற்குரிய வார்த்தை ஆதாமிடமிருந்து புறப்பட்டுச் செல்ல வேண்டியதாய் இருந்தது. அப்பொழுது அவளுக்கு பிள்ளைப்பேற்றில் வேதனை இல்லாத நிலை. ஆதாம் வாயிலிருந்து புறப்படும் வார்த்தை, அது அவன் விரும்பினதை செய்து, அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும். ஆக பிள்ளைப்பேறு தேவனுடைய வார்த்தையைக்கொண்டு பிறப்பிக்க வேண்டியதாயிருந்தது. ஆனால் ஏவாள் தேவனுடைய கட்டளையை மீறி, மாம்சத்தின் இச்சைக்குட்பட்டு, சாத்தானோடு உடலுறவுக்கொண்டு காயீனைப் பிறப்பித்தாள். தேவனுடைய திட்டம் சீர்குலைக்கப்பட்டது. இப்பொழுது பிள்ளைப்பிறப்பு மாம்சத்தின் இச்சைகளினால் உண்டாயிற்று. ஆனால் ஆதியில் தேவனுடைய நோக்கம் அப்படியல்ல. இப்பொழுது மனுஷன் பூமியின் மேல் பெருகத்துவங்கினான். அவர்கள் பெருக பெருக அவர்களுடைய அக்கிரமங்களும் பூமியில் பெருகின. அவர்களின் இருதயத்து நினைவுகளின் தோற்றம் எல்லாம் நித்தமும் பொல்லாததே என்று கர்த்தர் கண்டு, பூமியிலே மனுஷனை உண்டாகினதற்காக மனஸ்தாபப்பட்டார். அது அவருடைய இருதயத்திற்கு விசனமாய் இருந்தது.(ஆதி.6:5,6) முடிவு, அழியாமையிலிருந்த மனுஷன் அழிவுக்குரியவனானான். பாடுகளின்றி வாழ வேண்டியவன் பாடுகளுடன் வாழ வேண்டியவனானான்.

4. **ஜென்மசுபாவத்திற்குரியவன் :** இவன் பாவசுபாவத்திற்குரியவன். இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன். என் தாய் என்னை பாவத்தில் கர்ப்பந்தரித்தாள். (சங்.51:5)
**மாம்சத்துக்குரியவன்** : இவன் விசுவாசம் உள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றான். ஜலத்தினால் மாத்திரம் பிறந்தான். அதன் பின் பரிசுத்தமாக்கப்பட்டான். ஆனால் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெறவில்லை.
**ஆவிக்குரியவன்** : ஜலத்தினாலும், ஆவினாலும் மறுபடியும் பிறந்தவன். (யோ.3:5,7)

5. **இந்த செய்திக்குமுன் ஒரு அறிவுரை :** ஏழாம் சபைக்கால தூதனாகிய, லவோதிக்கேயா சபைக்கால தூதனாகிய, 20ம் நூற்றாண்டு தீர்க்கதரிசியுமாயிருந்த நம்முடைய சகோதரன் வில்லியம் மாரியன் பிரன்ஹாம், தேவனிடமிருந்து கிறிஸ்துவின் மணவாட்டிக்கு கொண்டுவந்த செய்தியை, ஏழாம் சபைக்குக்கொடுத்து, தன் பணியை முடித்து, அந்த செய்தியாளன் தன் ஓட்டத்தை முடித்துவிட்டார். ஆதலால் இனி கிறிஸ்துவுக்குள் நித்திரை அடைந்த நம்முடைய சகோதரனை மேன்மைப்படுத்தி, அவர் தேவன், கிறிஸ்து, மனுஷகுமாரன், ஒமேகா, அடிக்கப்பட்ட வண்ணமாயிருந்த ஆட்டுக்குட்டி, அப்.யோவான் இவர்காலில்தான் விழுந்தான், இவர் வேதவாக்கியங்களில் அறியாதது ஒன்றும் இல்லை என்று பலவிதமான கோஷங்களை எழுப்பி, அவரை புகழ்ந்துக்கொண்டும், எதற்கெடுத்தாலும், சகோ பிரன்ஹாம் கூறினார், சகோ பிரன்ஹாம் சொன்னார் என்று அவருடைய பெயரையே மேன்மைப்படுத்தி, அவரைக்குறித்து பேசிக்கொண்டிருப்பதினால் யாருக்கும் எந்தவிதமான பலனும் இல்லை. அவரை புகழ்ந்துக்கொண்டு திரிவது

பிசாசுக்கடுத்ததாகும். நாம் பவுல், பேதுரு, யோவான் குறித்து மேன்மை பாராட்டுவது இல்லை. அதுப்போன்று சகோ பிரன்ஹாம் குறித்தும் மேன்மை பாராட்ட தேவை இல்லை. தேவன் சகோ பிரன்ஹாம் மூலம் கொடுத்த செய்திக்காக, வெளிப்பாடுகளுக்காக தேவனைக்குறித்து மேன்மை பாராட்டுவோம். செய்தி அனுப்பியவரை மேன்மை பாராட்டாமல் செய்தியை சுமந்துக்கொண்டு வந்தவரை மேன்மை பாராட்டுவது என்ன? நாம் மாம்சமான யாரையும் தேவனுக்கு முன்பாக மேன்மை பாராட்டக்கூடாது. ஒருவனும் மனுஷனைக்குறித்து மேன்மை பாராட்டாதிருப்பானாக. மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மை பாராட்டக்கடவன். (தியானியுங்கள். 1கொரி.1:29.30, 3:21, 2கொரி.10:17) இதற்கு ஒரு எடுத்துக்காட்டு கொடுக்க விரும்புகிறேன். ஒரு பெண் குறி சொல்லுகிற ஆவியைக்கொண்டிருந்தாள். அவள் பவுலையும் அவன்கூட இருந்தவர்களையும் தொடர்ந்து சென்று : இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர். இரட்சிப்பின் வழியே நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள். அவள் சொன்னது 100% உண்மை. அதில் தவறு எதுவும் இல்லை. ஆனாலும் அநேக நாட்களாக இதைத்தொடர்ந்து செய்துக்கொண்டே வந்தாள். இதனால் பவுல் சினங்கொண்டு அந்த ஆவி அவளை விட்டு போகும்படி கட்டளையிட்டான். (அப்.16:16-18) அவள் தன்னிலுள்ள அசுத்த ஆவியைக்கொண்டு அவர்களை மேன்மைப்படுத்தினாள் ஆனால் வேதவாக்கியங்களின் அடிப்படையில் மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரையே மேன்மை பாராட்ட வேண்டும். இங்கோ இந்த பெண் மனுஷர்களைக்குறித்தே மேன்மை பாராட்டி வந்தாள். ஆதலால் அவளிடத்தில் உள்ளது அசுத்த ஆவி என்று பவுல் கண்டறிந்து அந்த ஆவி அவளைவிட்டு போகும்படி கட்டளையிட்டான். இன்றும் அந்த குறி செல்கிற அசுத்த ஆவியைக்கொண்டு நம்முடையவர்களில் அநேகர் கர்த்தரை மேன்மை பாராட்டாமல் சகோ பிரன்ஹாமையே மேன்மை பாராட்டிக்கொண்டு வருகிறார்கள். ஆதலால் இவர்களிடத்திலும் தேவனுடைய ஆவி இல்லை. மாறாக அந்த குறி சொல்லுகிற பெண்ணிடமிருந்த அதே அசுத்த ஆவி இவர்களிடத்திலும் உள்ளதை நான் கண்டுக்கொண்டேன். இது வேதவாக்கியங்களின் அடிப்படையில் சரியானது. சத்திய ஆவி இன்னதென்றும், வஞ்சக ஆவி இன்னதென்றும் ஆவிக்குரியவன் மாத்திரமே பகுத்தறிய முடியும். (1யோ.4:16) ஆக இந்த பிரன்ஹாம், பிரன்ஹாம் என்றுக்கூறிக்கொண்டே நம் மத்தியில் நடமாடி கொண்டிருக்கும் ஆவியைக்குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். இது பிசாசின் கிரியை / வஞ்சனை என்பதை அறிந்துகொள்ளுங்கள். சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினால் ஏவாளை வஞ்சித்தது என்பதை மறந்துவிடாதீர்கள். இப்பொழுது கவனியுங்கள். விசுவாசத்தினாலே ஏனோக் மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான். (எபி.11:5) பாருங்கள் அவன் எடுத்துக்கொள்ளப்படுதலுக்குரிய விசுவாசத்தைப்பெற்றவனாக இருந்தான். அதோடு மாத்திரம் அல்ல தேவனுக்கு பிரியமானவன் என்று சாட்சியும் பெற்றவனாய் இருந்தான். எடுத்துக்கொள்ளப்படுதல் வெகுசீக்கிரத்தில் இருக்கிறது என்று விசுவாசிக்கும் நமக்கு எந்தகாலத்திலும் விசுவாசிகள் பெற்றுக்கொள்ளாத அளவுக்கு அதிகமான விசுவாசம் இந்நாட்களில் தேவைப்படுகிறது. அது எடுத்துக்கொள்ளப்படுதலுக்குரிய விசுவாசமாய் இருக்கிறது. அது இக்காலத்திற்குரிய செய்தியாளனுடைய / தூதனுடைய செய்தியில் தான் இருக்கிறது. இச்செய்தி தேவனிடத்திலிருந்து வருகிறது. சபைக்கால தூதன் அந்த செய்தியை சுமந்துக்கொண்டுவரும் ஒரு தூதறிவிப்பவன் மாத்திரமே. செய்திக்குரியவர் கிறிஸ்து. செய்தியை சுமந்துக்கொண்டு வருகிறவன் அந்தந்த சபைக்காலத்து தூதன். ஆதலால் எனக்கு பிரியமானவர்களே கர்த்தர் தம்முடைய கிருபையினால் ஏழாம் சபைக்கால தூதன் மூலமாக நமக்கு கொடுத்து அனுப்பிய செய்தியைக்குறித்தே பேசுவோம், சிந்திப்போம், செயல்படுவோம், மேன்மை பாராட்டுவோம், அத்துடன் கர்த்தருடைய வருகைக்கு நம்மை ஆயத்தபடுத்துவோம்.

6. இப்பொழுது நாம் மூன்று விதமான மனுஷர்களைக்குறித்து காணும்முன் இதனோடு சம்பந்தப்பட்ட மூன்று வகையான விசுவாசிகளைக்குறித்து சற்று முன்னோட்டமாக காண்போம். **முதலாவது விசுவாசி** (யோ.6:68) **இரண்டாவது அவிசுவாசி** (யோ.6:66) **மூன்றாவது பாவனை விசுவாசி** (லூக்.22:48) இதுக்குறித்து இயேசு கப்பர்நகூமிலுள்ள ஜெபஆலயத்திலே பிரசங்கித்தார். அவரது பிரசங்கம், அங்கு அமர்ந்திருந்து பிரசங்கத்தைக் கேட்ட மக்கள் மத்தியில் மூன்று வகையான விசுவாசிகளைப் பிறப்பித்தது. அவரது பிரசங்கம் எப்பொழும், எங்கும் பிரிவினைகளைக்கொண்டு வருவதாகவே இருந்தது. அது எப்பொழுதும் அப்படியே இருக்கும். காலேப் யோசுவாவை நம்முடைய சபைகளில் அனுமதிக்காதீர்கள், அவர் நமது சபையில் பிரிவினைகளை உண்டாக்கி விட்டு சென்று விடுவார் என்று குற்றம் சாட்டுகிறார்கள். நான் ஒரு கூட்டம் ஜனங்களை கூட்டிச்சேர்க்க பட்ட பிரயாசங்களும், பாடுகளும் எனக்கு அல்லவா தெரியும், காலேப் யோசுவா வந்து ஒரிருமணிநேரம் பிரசங்கித்து, எனது விசுவாசிகள் மத்தியில் பிரிவினைகளை உண்டுப்பண்ணிவிட்டு சென்று விடுகிறாரே, சபையில் என்னை கேள்விக்கேட்க மக்கள் ஆரம்பித்துவிட்டார்களே என பாஸ்டர் முறுமுறுக்கிறார். ஆதலால் எந்த சபை பாஸ்டரும் என்னை அனுமதிப்பதில்லை. ஒரு உண்மையும், உத்தமுமான உக்கிராணக்காரன், பிரசங்கிக்கும் போது அவனிடமிருந்து தேவனுடைய வார்த்தை புறப்பட்டுச் செல்லும். தேவவசனம் புரட்டப்படாமல் சத்தியம் வெளிப்படும். அவர்கள் ஜாக்கிரதையாய் திருவசனத்தை பிரசங்கம் பண்ணி, எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி கடிந்துக்கொண்டு புத்திசொல்லுகிறார்கள். (2தீமோ.4:2-4, தீத்.1:14) ஆனால் ஜனங்களோ ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமால், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைக்களுக்கேற்ற போதகர்களை தெரிந்துக்கொள்ள விரும்புகிறார்கள். ஆக விதையானது வழியருகே விழுகிறது. பொல்லாங்கன் அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதை பறித்துக்கொள்கிறான். சில விதைகள் கற்பாறை இடங்களில் விழுந்தது. அவன் வசனத்தைக் கேட்கிறான், சந்தோஷமாய் ஏற்றுக்கொள்கிறான். தனக்குள்ளே வேர் இல்லாததால் கொஞ்சகாலம் நிலைத்திருந்து வசனத்தின் நிமித்தம் உபத்திரவமும், துன்பமும் உண்டான உடனே இடறல் அடைகிறான். சில விதைகள் முள் உள்ள இடங்களில் விழுந்தது. வசனத்தைக்கேட்கிறான், உலக கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் கேட்ட வசனத்தை நெருக்கிப்போடுகிறது. பலனற்றுப்போகிறான். சில விதைகள் நல்ல நிலத்தில் விழுகிறது. அவன் வசனத்தைக்கேட்கிறான், உணர்வடைகிறான், 100, 60, 30-ஆக பலன் கொடுக்கிறான். (மத்.13:18-23) ஆக ஒரு கூட்டத்தில் விதைக்கப்படும் விதை நான்குவிதமான இருதயத்தில் விழுந்து, அதுஅது தன்தன் பலனைக் கொடுக்கிறது. இதனால் அங்கு பிரிவினைகள் உண்டாகிறது. வசனத்தை பிரசிங்கிக்க கேட்டு சந்தோஷமாய் இருதயத்தில் ஏற்றுக்கொண்டு, ஒரு சாரார் கர்த்தருடைய வசனத்தை மகிமைபடுத்துகிறார்கள். இவர்கள் நித்திய ஜீவனுக்கென்றே நியமிக்கப்பட்டவர்கள். சிலர் வசனம் பிரசங்கிக்கப்படும்போது விசுவாசமில்லாமல் தங்களுக்குரிய ஒரு கோட்பாடுகளை மனதில் கொண்டு கேட்கிறார்கள். ஆதலால் அவர்கள் கேட்ட வசனம் அவர்களுக்கு பிரயோஜனப்படவில்லை. (எபி.4:2) இவர்கள் திருவசனத்திற்கு கீழ்படியாதிருந்து இடறுகிறார்கள். அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயுமிருக்கிறார்கள். (1பேது.2:8) இதனால் தான் பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்டு, பரிசுத்த ஆவியினாலே சபையிலே தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்படும் போது பிரிவினைகள் உண்டாகிறது. ஆதலால் காலேப் யோசுவா பிரிவினைகளை உண்டாக்குகிறார், உண்டாக்குகிறார் என்பவர்கள் தேவனுடைய வார்த்தையில் பழக்கமில்லாதவர்கள், அறைகுறை வேக்காடுகள். ஆதலால் நான் எங்கு சென்றாலும் அங்கு பிரிவினைகள் தேவனுடைய வார்த்தையின்பேரில் உண்டாகிறது. சில சபைகளில் பெண்கள் தங்கள் சேலை முந்தானையை தலைமுக்காடாக போடுகிறார்கள், சில சபைகளில் பெண்கள் தங்கள் தலைமயிரை தலைமுக்காடு என சத்தியத்தை அறிந்து அதில் நிலைத்து நிற்கிறார்கள்.(1கொரி.11:15) அங்கு ஊழியக்காரன் சேலைமுந்தானை உன் தலைமுக்காடு அல்ல என்றுக்கண்டித்து கண்டனம் பண்ணும்போது சபையில் பிரிவினைகள் உண்டாகிறது. ஆக பிரிவினைகள் உண்டாக காரணம் யார்? சபை பாஸ்டர் தானே. ஏனென்றால் இவர் தனது சபையை சத்தியத்தில் வழிநடத்துவது

இல்லை. ஏனென்றால் இவர் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட பாத்திரம் இல்லை. அதேப்போன்று பெண்கள் நகை அணிகிறார்கள், நகை அணியாத பெண்களும் உண்டு.(1பேது.3:3) ஊழியக்காரன் நகை அணியக்கூடாது என வேதவாக்கியங்களைக்கொண்டு கடிந்துக்கொள்ளும்போது அங்கு பிரிவினைகள் உண்டாகிறது. ஆனால் பழியை ஊழியகாரர்கள் மீது போட்டுவிடுகிறார்கள்.

7. பல ஆண்டுகளுக்கு முன்பு, மகாராஷ்டிராவில் பூனா அருகில் உள்ள தோண்ட் (Dhond) என்ற இடத்திற்கு மூன்று நாட்கள் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டேன். அந்நாட்களில் அங்குசெல்ல என்னிடம் பணவசதி, டிக்கட் எடுக்க தேவையான பொருளாதாரம் இல்லை. சகோ யோவேல் பரமானந்தத்திற்கு (VOGR) விவரம் கூறினேன். அவர் டிக்கெட் எடுத்து உதவி செய்தார். கூட்டம் நடக்க ஒரிரு நாட்கள் இருக்கும்போது திடிரென ஒரு தந்தி வந்தது. அதில் கூட்டம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டிருந்தது. ஆனால் உண்மையில் அது அப்படியல்ல என்பதை பின்பு தெரிய வந்தேன். அந்த சபையில் அநேகர் எனக்கு எதிர்ப்பு தெரிவித்து, அவர் செல்லும் இடங்களிலேல்லாம் சபைகள் உடைகிறது. ஆக அவர் வந்து சென்றால் நமது சபையும் உடையும், ஆதலால் அவரை அழைக்கவே வேண்டாம் என சபையில் முறுமுறுப்பு. அதன்பின் அவர்கள் மற்றொரு ஊழியக்காரனை வைத்து கூட்டம் நடத்தினார்கள். சில ஆண்டுகள் கழித்து மீண்டும் அதே பாஸ்டரிமிருந்து எனக்கு அழைப்பு வந்தது. முன்தின சம்பவத்திற்காக வருத்தப்படுவதாகவும், இந்தமுறை கண்டிப்பாக வரவேண்டும் என்றும் அழைப்புக்கொடுத்தார். நடந்த சம்பவம் என்னவென்றால் பாஸ்டருக்கு என்னை அழைக்க விருப்பம். ஆனால் சபையாருக்கோ இல்லை. முடிவாக எது எப்படியிருந்தாலும் ஒருமுறை சகோ காலேப் யோசுவாவை அழைத்துத்தான் பார்ப்போம் என்ற முடிவுடன் அழைத்தார்கள். நானும் குறிப்பிட்ட நாளில் சென்றேன். பாஸ்டர் முதல் நாள் கூட்டத்திலே சகோ காலேப் யோசுவா தினசரி காலை மூன்று மணிநேரம், மாலை மூன்று மணிநேரம், ஆக ஒருநாள் சுமார் ஆறுமணிநேரம், மூன்று நாட்கள் நம் மத்தியில் பிரசங்கிப்பார். மூன்று நாட்கள் வரை அவர் செய்திக்குறித்து நான் கருத்து எதுவும் கூறமாட்டேன், சபையாராகிய நீங்களும் எதுவும் பேசக்கூடாது எனக்கேட்டுக்கொண்டார். மூன்றாவது நாள் மாலை கூட்டம் முடிந்தவுடன் பாஸ்டர், சபையில் அனைவரும் செய்தியைக்குறித்து தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை பேசலாம், சந்தேகங்களுக்கு விளக்கங்கள் கேட்கலாம் என்றார். அனைத்து விசுவாசிகளும் ஒரே குரலில் அவர் பிரசங்கித்த செய்திகளில் எங்களுக்கு எந்தவிதமான முரண்பாடான கருத்துக்கள் இல்லை என்று கூறினார்கள். பாஸ்டரும் அதை ஆமோதித்து அப்படியானால் நமது கூட்டத்தை இன்னும் மூன்று நாட்கள் நீடிக்கலாமா என்று கேட்க, அவர்களும் ஏகமனதோடு ஒப்புக்கொண்டார்கள். ஆக மூன்று நாட்கள் கூட்டத்திற்கு சென்ற நான் ஆறுநாட்கள் பிரசங்கித்தேன். அங்கு பிரிவினைகள் ஏதும் இல்லை. ஏன்? அந்த சபை பாஸ்டரும் சத்தியத்தை சத்தியமாக போதித்து வந்தார். ஆதலால் தான் அங்கு பிரிவினையில்லை. மூன்றாம் நாள் மாலை ஒரு முக்கிய சம்பவம் நடந்தது. பாஸ்டருடைய தம்பி ஒரு அரசுடைமை வங்கியில் கணக்காளர். அவரது மனைவி ஒரு மருத்துவமனையில் செவிலியர். தம்பி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்ற ஒரு பயபக்தியுள்ள விசுவாசி. ஆனால் அவரது மனைவி ஒரு பக்கா CPM (TPM) விசுவாசி. இதனால் கணவன் மனைவிக்கு இடையே ஆவிக்குரிய காரியங்களில் கருத்துவேறுபாடுகள். கணவன் சத்தியத்தை பலமுறை எடுத்துக்கூறியும் மனைவி கேட்கவில்லை ஆதலால் குடும்பத்தில் அடிக்கடிப் பிரசனைகள். கணவன் மனைவியை அடிப்பதும் உண்டு. இந்நிலையில் மூன்றாம் நாள் இரவு என்னை பாஸ்டருடைய தம்பி தன்னுடைய இல்லத்திற்கு இரவு உணவிற்கு அழைத்தார். நானும் சென்றேன். நான் வீட்டைவிட்டு வெளியேறும்போது மீண்டும் மூன்று நாட்கள் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதால், நாளை இரவும் உணவுக்கு வாருங்கள் என பாஸ்டருடைய தம்பியின் மனைவி என்னை அழைக்க, நான் மறுஉத்திரவாக: உங்களது கணவர் எனது ஆவிக்குரிய சகோதரன், ஆதலால் அவர் அழைப்பை ஏற்று வந்தேன். ஆனால் ஆவிக்குரிய சகோதரியாக நீங்கள் இல்லையே, நான் எப்படி உங்கள் அழைப்பை ஏற்றுக்கொள்ள முடியும் என்றேன். தேவன் அவர்களது உள்ளத்தை தொட்டார். லிதீயாள் இருதயம் திறக்கப்பட்டது போல் இவர்களது இருதயமும் திறக்கப்பட்டது. விசுவாசத்தின் கதவும் திறக்கப்பட்டது. விசுவாசத்தை தேவன் அவர் உள்ளத்தில் தொடங்கினார். உடனே அந்த சகோதரி நான் உங்கள் கரத்தினால் நாளை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறுவேன், அதோடுமட்டுமல்ல சபையார் அனைவருக்கும் நாளை என் வீட்டில் விருந்து எனக்கூறி, பின் தனது சொல்லை செயலில் காண்பித்தார்கள். பாருங்கள் பிரசங்கம் ஒரு இடத்தில் பிரிவினையை உண்டுபண்ணுகிறது. மற்றொரு இடத்தில் அது ஐக்கியத்தையும் உண்டுபண்ணுகிறது. இது என்ன? தேவனுடைய வார்த்தை பதரிலிருந்து கோதுமையை பிரித்தெடுக்கிறது. காலேப் யோசுவா பிரிவினைகளை உண்டுப்பண்ணுவது இல்லை. மாறாக தேவனுடைய வார்த்தையே பிரிவினைகளை உண்டுப்பண்ணுகிறது. ஆகவே முற்றிலும் பிரிவினைகள் அனைத்தும் வேதவாக்கியங்களின் அடிப்படையிலே உள்ளது. அது எப்பொழுதுமே ஒரு பக்கம் நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்களையும், மறுபக்கத்தில் இதர மூன்றுவகையான நிலத்தில் விதைக்கப்பட்டவர்களையும் கூட்டிச்சேர்க்கிறது. முந்தினவர்கள் நித்தியஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவர்கள், பிந்தினவர்கள் இடறுதலுக்கென்று நியமிக்கப்பட்டவர்கள், தேவனுடைய வார்த்தையைக்கேட்டு அதை காத்துக்கொள்கிறவர்களே பாக்கியவான்கள். (லூக்.11:28)

8. **ஒரு விசுவாசி யார்?** இவர்கள் தேவனுக்கு முன்பாக அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும், குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, உலகத்தோற்றத்திற்குமுன்னே கிறிஸ்துவுக்குள் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள். (எபே.1:4) பாருங்கள் தேவபக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவும், விசுவாசமும் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களுக்கே உண்டாகும். (தீத்.1:3) இவர்கள் எந்த ஸ்தாபன சபையிலும் அங்கத்தினராக உள்ளவர்கள் அல்ல. அல்லது மூலைமூடுக்குகளில் பலவிதமான பேர்பலகைகளைக்கொண்ட கொட்டகைகளில் தஞ்சம் புகுந்தவர்களும் அல்ல. மாறாக தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள். இவர்களிடத்தில் விசுவாசம் கிரியை செய்கிறது. அதை தொடங்கினவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. (எபி.12:1) தேவன் சர்வ ஞானி (God is Omniscient) எல்லாம் அறிந்தவர். (யோ.2:24) அவருக்கு யாரும் ஆலோசனைக்கூற, அறிவுறைக்கூற தேவையில்லை. ஞானம் தேவனுக்கே உரியது. (தானி.2:20) தேவன் சர்வஞானியாக இருப்பதால், ஆதிமுதல் அந்தம்வரை எல்லாவற்றையும் அவர் முன்கூட்டியே அறிவார். உலகத்தோற்றம் முதல் தேவனுக்கு தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது. (அப்.15:18) இப்பொழுது தேவன் தம்முடைய முன்னறியும் அறிவைக்கொண்டு எல்லாவற்றையும் முன்னறிகிறார். தேவனுடைய முன்னறிவு (Fore Knowledge) குறித்து 1பேது.1:2 மற்றும் அப்.2:23 ல் தியானிக்கலாம். மேலும் தேவனுடைய முன்னறிதல் (Fore Know) குறித்து ரோ.8:29 மற்றும் 11:2ல் தியானிக்கலாம். ஆக தேவன் தம்முடைய முன்னறியும் அறிவைக்கொண்டு நடக்கப்போகும் ஒன்றை முன்னே அறிவார். அப்படியாக தேவன் தம்முடைய முன்னறியும் அறிவைக்கொண்டு முன்குறிக்கிறார், முன்நியமிக்கிறார். முன் குறித்தல் (Predestinate) குறித்து ரோ.8:29,30 ல் தியானிக்கலாம். முன்கூட்டியே நியமிப்பது (Fore Ordination) குறித்து 1பேது.1:20 ல் தியானிக்கலாம். ஆக தேவனுடைய முன்னறியும் அறிவைக்கொண்டு, ஒன்றை முன்னறிந்து அதை முன்குறித்து, முன் நியமித்தல் யாவும் உலகத்தோற்றத்திற்கு முன்னே நடக்கிறது. நான் நினைத்திருக்கிறபடியே நடக்கும், நான் நிர்ணயித்தபடியே நிலைநிற்கும். (எசா.14:24) இயேசு : (அ) உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவர். (1பேது.1:20) (ஆ) உலகத்தோற்றத்திற்கு முன்னே பிதாவினால் அன்புக்கூறப்பட்டவர் (யோ.17:24) (இ) முன் அறிவிப்பின்படியே ஒப்புக்கொடுக்கப்பட்டவர் (அப்.2:23) (ஈ) உலகத்தோற்றம் முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி (வெளி.13:8) அவ்வண்ணமாகவே கிறிஸ்துவின் மணவாட்டி (அ) விசுவாசிகள், ஆவிக்குரியவர்கள், உலகத்தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள். (ஆ) இவர்களுடைய பெயர்கள் உலகத்தோற்றம் முதல் ஜீவபுஸ்தகத்தில்

எழுதப்பட்டுள்ளது. (இ) இவர்களுடைய வாயிலிருந்து சொல் பிறவாததற்கு முன்னே தேவன் இவர்களை அறிந்திருக்கிறார். (சங்.139:4) ஆக (அ) தேவனுடைய கரம் முன்குறித்தவையாவையும் செய்யும் (அப்.4:27) (ஆ) தேவனுடைய கிரியைகள் யாவும் உலகத்தோற்றம் முதல் முடிவுப்பெற்றது (எபி.4:3) (இ) ஆக தேவன் உலகத்தோற்றத்திற்கு முன்னே ஒருவனை அறிந்து, அந்த அறிவின்படி அவனை முன்குறித்து அழைக்கிறார்.

9. இயேசு : பன்னிருவரையும் நோக்கி : நீங்கள் என்னைவிட்டு போய்விட மனதாயிருக்கிறீர்களா என்றார். **பேதுரு :** ஆண்டவரே, யாரிடத்தில் போவோம்? நித்திய ஜீவவசனங்கள் உம்மிடத்தில் உண்டே என்றான். (யோ.6.68) பாருங்கள் இவன்தான் விசுவாசி. ஆனால் திருத்துவ ஸ்தாபனசபை ஜனங்கள் நித்திய ஜீவனை பற்றிக்கொள்ளாமல் ஸ்தாபனசபைகளை பற்றிக்கொண்டார்கள். உலகம் சுற்றும் பிரயாணத்தை தங்களது ஊழியமாக கொண்டுள்ள மனுஷர்களைப் பற்றிக்கொண்டார்கள். ஆனால் இவர்கள் உங்களை நித்திய ஜீவனுக்குள் வழிநடத்த முடியுமா? முடியாதே! உங்கள் நண்பரது உலகம் சுற்றும் பிரயாணம் ஜீவபுஸ்தகத்தில் அவரது பெயரை தக்கவைக்குமோ? சிந்தித்து செயல்படுங்கள். ஆனால் கவனியுங்கள் தேவனுடைய பரிசுத்தவான்களோ அவருடைய கையில் இருக்கிறார்கள். அவருடைய வார்த்தையினால் போதனை அடைகிறார்கள். (உபா.33:3) ஆனால் நீங்களோ உங்கள் ஸ்தாபன சபைகள் மீது பற்றுள்ளவர்களாக, அதனுடைய கரத்தில் இருந்துக்கொண்டு அது உங்களுக்கு கொடுக்கும் வேலைவாய்ப்புகளைக்கொண்டு அதில் சுகபோகமாக ஜீவிக்கிறீர்கள். அநேகர் ஸ்தாபனசபைகளை சார்ந்திருப்பதின் நோக்கமே ஜீவனத்திற்கு அதில் கிடைக்கும் வேலைவாய்ப்புகளைக் கொண்டுதான். பொதுவாக ஸ்தாபனசபைகள் நடத்தும் பள்ளிகளில், கல்லூரிகளில், மருத்துவமனைகளில் வேலைவாய்ப்பை நாடியே நீங்கள் அதன் கரத்தில் உள்ளீர்கள். ஸ்தாபனசபை உதவிகளில் நீங்கள் இம்மைக்குரிய நன்மைகளை பெற அதன் கரத்தில் இருக்கிறீர்கள். அதனுடைய உபதேசத்தில், போதனையில், பிரமாணங்களில் உங்கள் வாழ்க்கையை மாற்றிக்கொண்டீர்கள். ஆம் ஸ்தாபனசபைகளில் பிழைப்புக்காக இருந்துக்கொண்டு அதன் உபதேசங்களை உங்களுக்கு போதனையாக கொண்டுள்ளீர்கள். மனுஷர்களுடைய கரத்திலிருந்துக்கொண்டு, மனுஷர்களுடைய வார்த்தைகளில் போதனை அடைந்து வருகிறீர்கள். நீங்கள் விசுவாசியல்ல, தேவன் உங்களிடத்தில் பிரியமாய் இருப்பதும் இல்லை. இரண்டாவது பேதுருவைப்போன்று **மரியாளும் ஒரு விசுவாசி.** அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து அவருடைய வார்த்தையை கேட்டுக்கொண்டிருந்தாள். ஆம் தேவையானது இது ஒன்றே. மரியாள் தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்துக்கொண்டாள். (லூக்.10:39-42) ஆனால் நீங்களோ உங்கள் பிஷப், அருட்திரு பாதத்தில் அமர்ந்திருந்து ஒரு நல்ல வேலை கிடைக்காதா என அவருக்கு சேவை செய்துக்கொண்டு வருகிறீர்கள். சபைத்தலைவர்கள் வீடுகளில் சட்டிபானைகளை கழுவிக்கொண்டு, அதன்மூலம் வேலை கிடைக்காதா என ஏங்கி நிற்கிறீர்கள். இப்பிரபஞ்சத்தின் நம்மைகளுக்காகவே தேவனையும், ஸ்தாபனசபைகளையும், அதன் தலைவர்களையும் பற்றிக்கொண்டீர்கள். **மூன்றாவதாக யோபு** என்ற விசுவாசியை கவனியுங்கள். அவன் : அவருடைய வாயின் வார்த்தைகளைக் எனக்கு வேண்டிய ஆகாரத்தை பார்க்கிலும் அதிகமாய் காத்துக்கொண்டேன் என்றான். (யோபு.23:12) நீங்கள் ஆவிக்குரிய கூட்டங்கள், கன்வென்ஷன்கள், அந்த ஊழியம், இந்த ஊழியம் என கூறிக்கொண்டு அதில் ஒரு பணவரவையும், பிரியாணி விருந்தையுமே உங்கள் இலக்காக கொண்டுள்ளீர்கள். ஆனால் யோபுவுக்கோ பணம், பிரியாணி முக்கியம் அல்ல, தேவனுடைய வார்த்தையே அதிமுக்கியமாக காணப்பட்டது.

10. **விசுவாசிகள் தேவஇரகசியங்களின் வெளிப்பாட்டை பெற்றவர்கள்.** தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது. (லூக்.8:10) எடுத்துக்காட்டாக (அ) **ஆபேல்** தன் மந்தையின் தலையீற்றுகளிலும், அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான். ஆபேலையும் அவன் காணிக்கைகளையும் கர்த்தர் அங்கிகரித்தார். (ஆதி.4:4) ஆபேல் பெற்ற வெளிப்பாட்டை காயீன் பெறவில்லை. அவர்களுக்கு பலி செலுத்த அந்நாட்களில் எந்தவிதமான பிரமாணமும் இல்லை. வெளிப்பாட்டின் மூலம் ஆபேல் தேவனுக்கு பிரியமானதைக் கொண்டுவந்து பலி செலுத்தினான். (ஆ) அடுத்து இயேசு : நீங்கள் என்னை யாரென்று சொல்லுகிறீர்கள் என்று கேட்க, **பேதுரு :** நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். ஆனால் சிலரோ அவரை யோவான் ஸ்நானன் என்றும், எலியா என்றும், நெகேமியா என்றும், தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் கூறினார்கள். இயேசு பேதுருவை நோக்கி : மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வழிப்படுத்தவில்லை, பரலோகத்தில் இருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார் என்றார். பாருங்கள் உலகம் ஒரே தேவனில் மூன்று நபர்கள் (Three persons in one God) என்கிறார்கள். ஆனால் விசுவாசிகளோ தேவதுவத்தின் பரிபூரணமெல்லாம் ஆவிக்குரிய பிரகாரமாக மற்றும் சரீரப்பிரகாரமாக ஒருவருக்குள்ளே, கிறிஸ்துவுக்குள்ளே (கொலோ.2:9) என்று விசுவாசிக்கிறார்கள். (இ) **ஸ்தேவானுக்கு** ஒரு வெளிப்பாடு கிடைத்தது. தன்னிலுள்ள ஆவியை அவனுக்கு கொடுத்தது யார்? என்று. அவன் கர்த்தராகிய இயேசுவே என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்றான். (அப்.7:59) ஆவி தன்னைத்தந்த தேவனிடத்திற்கு (இயேசுவினிடத்திற்கு) திரும்பிச்சென்றது. (பிர.12:7) இவர் யார்? உலகத்தையும், அதில் உள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவன். எல்லாருக்கும் ஜீவனையும், சுவாசத்தையும் கொடுத்தவர். (அப்.17:24,25) (ஈ) அடுத்து **தோமாவுக்கும்** ஒரு வெளிப்பாடு கிடைத்தது. அவன் என் ஆண்டவரே என் தேவனே என்றான். (யோ.20:28) இவர் யார்? இவரே மெய்யான தேவனும், நித்திய ஜீவனுமாய் இருக்கிறார். (1யோ.5:20) கர்த்தரே மெய்யான தெய்வம், அவர் ஜீவனுள்ள தேவன், நித்திய ராஜா (எரே.10:10) இந்த வெளிப்பாடு கத்தோலிக்க திருச்சபையை சார்ந்தவர்களிடத்திலும், திருத்துவ ஸ்தாபன சபைகளை சார்ந்தவர்களிடத்திலும் இல்லையே! ஆக பிரியமானவர்களே தேவதுவத்தைக்குறித்த வெளிப்பாடு எல்லாருக்கும் கிடைப்பது இல்லை. அது தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களுக்கே உண்டாகும். அவர்கள்தான் உண்மையான விசுவாசி. பிதாவையும், குமாரனையும் ஒருவன் அறியவேண்டும் என்றால் அது கல்லூரியில் பெற்ற கல்வியின் மூலமாக அல்ல. மாறாக வெளிப்பாட்டின் மூலமாகவே. அதாவது பிதா ஒருவனுக்கு குமாரனை வெளிப்படுத்தவேண்டும், குமாரன் பிதாவை வெளிப்படுத்த வேண்டும்.(மத்.11:27) இதில் தான் தேவதுவத்தில் ஸ்தாபன சபைகள் இடறுகின்றன. அடுத்து இவர்கள் அதாவது விசுவாசிகள், கற்புள்ள கன்னிகைகள் (2கொரி.11:2) இவர்களை யாரும் வஞ்சிக்க முடியாது. (மத்.24:24) இவர்களை சகோ ரிச்சர்டு கேன், சகோ டால்டன் புரூஸ், சகோ காக்குவ் பிலிப்பு போன்றவர்கள் வஞ்சிக்க முடியாது. தேவனுடைய ஆவி இவர்களிடத்தில் இருப்பதால், இவர்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறார்கள். இவர்களிடத்தில் கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது. (1கொரி.2:15,16) சகோ பாலாசீர்லாறியை மணவாளனாக ஏற்றுக்கொண்டவர்கள், சகோ பிரன்ஹாமை மணவாளனாக ஏற்றுக்கொண்டவர்கள் அனைவரும் ஆவிக்குரிய விபச்சாரிகளே! மேலும் விசுவாசிகள் தனியே வாசமாய் இருப்பார்கள் (எண்.23:9) இவர்களுடைய பழக்க வழக்கங்கள், சகல ஜனங்களுடைய வழக்கங்களுக்கும் விகற்பமாயிருக்கும். (எஸ்.3:8) இவர்கள் சிதறுண்டு பரவியிருப்பார்கள். பாருங்கள் ஜாதிகளின் பெண்கள் நகை ஆபரணங்களால் தங்களை அலங்கரிப்பார்கள். ஆனால் இவர்களோ அவ்வாறு செய்வதில்லை. மேலும் பெண்கள் சபை கூடுதலுக்குச்சென்றால், தங்கள் சேலை முந்தானையால் அல்லது கைக்குட்டையினால் அல்லது தொப்பியினால் தங்களது தலையை மறைத்துக்கொள்வார்கள். ஆனால் விசுவாசிகளோ அப்படி செல்வது இல்லை. மாறாக நீண்ட தலைமயிரை உடையவர்களாக தங்கள் தலையை எந்த விதமான பொருட்களாலும் மூடாது காணப்படுவார்கள். அவர்கள் பொது ஸ்தலங்களுக்குச் சென்று பணிபுரிவார்கள். ஆனால் இவர்களோ வீட்டில் தரித்திருந்து தனது குடும்ப காரியத்தில், வேதவாசிப்பிலும் ஜெபத்திலும் தரித்திருப்பார்கள். அவர்கள் நாம் இருவர் நமக்கு ஒருவர்

அல்லது இருவர் என்றுக்கூறி கர்ப்பத்தடை செய்துகொள்வார்கள். ஆனால் விசுவாசிகள் அப்படி செய்யமாட்டார்கள். கர்ப்பத்திற்கு தடை விதிக்க மாட்டார்கள். அவர்கள் ஐந்துவகை ஊழியங்களுக்குரிய பிரசங்கபீடத்தில் நின்று ஆண்கள் மீது அதிகாரம் செலுத்தி பிரசங்கிப்பார்கள். ஆனால் இவர்களோ சபையில் அமைதியாக இருப்பார்கள். தங்கள் சந்தேகங்களை தங்கள் புருஷர்களிடம் கேட்டு தெரிந்துக்கொள்வார்கள். தங்கள் கணவனுக்கு எல்லாவற்றிலும் கீழ்படிந்திருப்பார்கள். இவர்களில் பெண்கள் ஆண்களின் ஆடையையும், ஆண்கள் பெண்களின் ஆடையையும் அணிந்துக்கொள்ளாது, நல்லதென்று தங்களுக்கென நிர்ணயித்த, நியமித்த, நிச்சயித்த ஆடைகளை அணிவார்கள். ஆணகளும் தங்கள் மனைவி பிள்ளைகளை தங்களது உழைப்பால், பூமியில் தங்கள் வருத்தத்தோடே அதன் பலனை புசிப்பார்கள். ஆண்கள் தங்கள் குடும்பத்தைபோஷித்து காப்பாற்றுவார்கள். கர்த்தருக்குரிய தசமபாகத்தை ஒழுங்காக செலுத்துவார்கள். வேதவாக்கியங்களின்படி தங்களை காத்துக்கொள்வார்கள். ஆக அவர்களுடைய பழக்கவழக்கங்களிலிருந்து விசுவாசிகளுடைய பழக்கவழக்கங்கள் வித்தியாசமாக இருக்கும். இவர்கள் தேவனுடைய வசனத்திற்கு கீழ்படியாதவர்களுடன் கலந்துக்கொள்ள மாட்டார்கள். (2தெச.3:14) கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்படியாதவர்களை தங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவர்களுக்கு வாழ்த்துதலும் கூறமாட்டார்கள். (2யோ:9,10) அந்நியநுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படமாட்டார்கள். அவிசுவாசிகளுடன் பங்குக்கொள்ள மாட்டார்கள். இதுக்குறித்து 2கொரி.6:14-18 வசனங்களை தியானியுங்கள். இவர்கள் மனுஷருடைய கற்பனைகளுக்கும், பிரமாணங்களுக்கும் செவியை விலக்கி, சத்திய ஆவியானவருடைய வழிநடத்துதலுக்கு தங்களை ஒப்புவித்தவர்கள். (மத்.15:9,யோ.16:13) இவர்கள் ஸ்தாபன சபைகளின் உபதேசங்களுக்கு உட்பட்டவர்கள் அல்ல. தேவனுடைய வார்த்தையை தங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொண்டு அதன்படி நடந்து கனி கொடுக்கிறவர்கள். விசுவாசிகள் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள் ஞானஸ்நானம் பெற்றவர்கள். (1கொரி.12:13) இவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் தங்கள் பாவங்களுக்கு மன்னிப்பை பெற்றவர்கள், நீதிமான்களாக்கப்பட்டவர்கள், பரிசுத்தமாக்கப்பட்டவர்கள், பரிசுத்த ஆவியை பெற்றவர்கள், கிறிஸ்துவை தரித்துக்கொண்டவர்கள். (கலா.3:27,28) ஆவியின் கனிகளை உடையவர்கள். (கலா.6:22,23) ஆவியின் வரங்களை உடையவர்கள். (1கொரி.12அதி) கடைசியாக இவர்கள் இந்த உலகத்திலும், உலகத்தில் உள்ளவைகளிலும் இருந்து வெளியே அழைக்கப்பட்டவர்கள். (1யோ.2:15-17) இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடி, முற்காலத்திலே தங்களது மாம்ச இச்சைகளின்படியே நடந்து, மாம்சமும் மனதும் விரும்பினவைகளை செய்து, சுபாவத்திலே கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்த, அக்கிரமங்களில் மரித்தவர்களாய் இருந்த இவர்களை தேவன் கிறிஸ்துவுடன் கூடே உயிர்பித்தார், கிருபையினால் இரட்சிக்கப்பட்டார்கள். (எபே.2:1-5) புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொண்டார்கள். (கொலோ.3:10) மறுஜென்மமுழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் இரட்சிக்கப்பட்டவர்கள். (தீத்.3:5) முடிவாக விசுவாசிகள் இந்த உலகத்தில் அந்நியரும், பரதேசிகளுமானவர்கள். (எபி.11:13) ஆதலால் இவர்களுடைய குடியிருப்பு இந்த பூமியில் அல்ல. மாறாக பரலோகத்தில் இருக்கிறது . (பிலி.3:20)

11. **மேலும் இந்த விசுவாசிகள் குறித்து சற்று காண்போம்.**

(அ) தேவனால் ஒருவன் நியமிக்கப்பட்டு, ஏற்படுத்தப்பட்டு நற்செய்தியை, கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசிங்கிக்க அனுப்பப்பட்டு அவன் பிரசிங்கிக்கிறான். அவன் பிரசங்கத்தை காதுள்ளவர்கள் கேட்கிறார்கள். அனுப்பப்பட்டவனுடைய பிரசங்கம் தேவனுடைய வார்த்தையிலிருந்து வருகிறது. அனுப்பப்பட்டவன் ஸ்தாபன சபைகளிலிருந்து வருவானாகில் அவன் தன் ஸ்தாபனத்தின் கோட்பாடுகளையே பிரசங்கம் பண்ணுவான். இப்பொழுது தேவனுடைய வார்த்தையை கேட்டவர்கள் உள்ளத்தில் விசுவாசத்தைக்கொண்டு வருகிறது. நித்திய ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவர்கள் விசுவாசித்தார்கள். (அப்.13:48) அதாவது நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக்கேட்டு, ஸ்தாபன சபைகோட்பாடுகளைக்கேட்டு அல்ல. மாறாக தேவனுடைய வார்த்தைகளை கேட்டு, அதை தங்களது உண்மையும், நன்மையுமான இருதயத்திலே காத்து பொறுமையுடன் பலன் கொடுக்கிறார்கள். (லூக்.8:15) பாருங்கள் பெந்தெகொஸ்தே நாளான்று நித்திய ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவர்கள் பேதுருவின் பிரசங்கத்தை கேட்டார்கள். இருதயத்தில் குத்தப்பட்டார்கள். (அப்.2:37) வேதவாக்கியங்களின்படி கிறிஸ்து தங்களுடைய பாவங்களுக்காக மரித்தார், அடக்கம்பண்ணப்பட்டார், மூன்று பகல்கள் மூன்று இரவுகள் பூமியின் இருதயத்தில் இருந்தார். (யோனா.1:17, மத்.12:40) உயிர்தெழுந்தார் என்று விசுவாசித்தார்கள், விசுவாசத்தை அறிக்கையிட்டார்கள். (ரோ.6:3-5) கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் அன்று மூவாயிரம் பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். (அப்.2:38,41) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தவர்கள், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றார்கள். (அப்.10:43) ஆனால் இன்று திருத்துவ ஸ்தாபன சபைகளை விசுவாசிப்பவர்கள் பிதாகுமாரன் பரிசுத்த ஆவி என உச்சரித்து ஞானஸ்நானம் பெறுகிறார்கள். முந்தின ஞானஸ்நானம் ஒருவனை கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவமாக சேர்க்கிறது. பிந்தின ஞானஸ்நானம் ஸ்தாபன சபை ஒன்றில் அவனை அவயவமாக சேர்க்கிறது. முந்தினதில் ஒரு மனிதன் பாவியாக தண்ணீருக்குள் சென்று இரத்தத்தினால் கழுவப்பட்டு புது சிருஷ்டியாக வெளியே வருகிறான். ஆனால் பிந்தின மனுஷனோ ஒரு பாவியாக தண்ணீருக்குள் சென்று, ஒரு பாவியாகவே மீண்டும் மேலே வருகிறான். ஏனென்றால் நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தில் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ள கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமமேயல்லாமல், வெறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை. (அப்.4:12) இவ்வாறாக இரட்சிக்கப்பட்டவர்களைத்தான் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார். (அப்.2:47) ஆக பெந்தகொஸ்தே நாளான்று சபை உருவானது. அதில் கர்த்தராகிய இயேது கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள் தான் அங்கத்தினர்கள். இவர்களுக்குத்தான் அப்போஸ்தலர்களுடைய நிருபங்கள் எழுதப்பட்டுள்ளது.

(ஆ) நீங்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படும் ஒரு குடும்பத்தில் பிறந்து வளர்ந்ததினால் உங்களை விசுவாசிகள் என்று அழைக்க முடியாது. நீங்கள் வேதாகமத்தில் உள்ள பரிசுத்தவான்களின் பெயரை வைத்துக்கொண்டு, உங்களை விசுவாசிகள் என்று அழைக்கமுடியாது. நீங்கள் திருத்துவ ஸ்தாபன சபை ஒன்றில் சேர்ந்திருப்பதால், உங்களை விசுவாசிகள் என அழைக்கமுடியாது. நீங்கள் ஒரு வேதாகம கல்லூரியில் படித்து பட்டங்கள் பல பெற்றிருப்பதினால், ஒரு நல்ல உத்தியோகத்தில் அமர்ந்திருப்பதினால் உங்களை விசுவாசிகள் என அழைக்கமுடியாது. நீங்கள் பரிசுத்த வேதாகமத்தை முழங்காலில் நின்று படித்து, பல காரியங்களை தெரிந்து வைத்திருப்பதினால் விசுவாசியாக முடியாது. நீங்கள் பல ஆயிரம் மக்களைக்கொண்ட ஒரு சபைத்தலைவராகவும் இருக்கலாம், அது உங்களை விசுவாசியாக்கி விடாது. நீங்கள் அற்புத அடையாளங்களை செய்யலாம். அதுவும் உங்களை விசுவாசியாக்காது. நீங்கள் ஊழியம் என்றுக்கூறிக்கொண்டு உலகம் முழுவதையும் சுற்றி வரலாம், அதவும் உங்களை விசுவாசியாக்காது. நீங்கள் கொர்நெலியு போன்று ஒரு சன்மார்க்க ஜீவியம் செய்வதினாலும் உங்களை விசுவாசி என்று அழைக்கமுடியாது. இதுப்போன்று நான் அநேக காரியங்களை எழுதலாம். ஆனால் இவைகள் யாவும் உங்களை இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க தகுதியாக்காது. ஒரு உண்மையான விசுவாசி, நீதிமான், பரிசுத்தவான், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்குள் கடந்து செல்லவேண்டும். அதாவது ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் மறுபடியும் பிறக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவின் ஏழு தெய்வீக சுபாவத்தில் பங்குகொள்ள வேண்டும். ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சியை அடைய வேண்டும். (2பேது.1:5-9)

12. **அடுத்து அவிசுவாசிகளைக்குறித்து தியானிப்போம்.** இயேசு முதலாவது பன்னிரெண்டு அப்போஸ்தலர்களை தெரிந்துக்கொண்டார். (மத்.10:2-4) அதன்பின் கர்த்தர் வேறே எழுபது பேரை நியமித்தார். (லூக்.10:1) ஒருநாள் என் மாம்சத்தை புசித்து, என் இரத்தத்தை பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. நான் அவனை கடைசிநாளில் எழுப்புவேன் என்றார். (யோ.6:54) அதன் அர்த்தத்தை அவர்களால் புரிந்துக்கொள்ள முடியவில்லை. ஆதலால் இது கடினமான உபதேசம் எனக்கூறி அவருடைய சீஷர்களில் அநேகர் முறுமுறுத்தார்கள், அவரைவிட்டு பின் வாங்கினார்கள், (யோ.6:60,61) அவர் அவர்களோடு உவமைகளாகப் பேசினார். உவமைகளினாலேயன்றி அவர்களிடம் பேசவில்லை. (மத்.13:34) இங்கு இயேசு சொன்ன வார்த்தையின் கருத்தை அவர்கள் அறிந்துக்கொள்ளவில்லை. அது அவர்களுக்கு தோன்றாமல் மறைப்பொருளாயிருந்தது. அவர்கள் அதைக்குறித்து அவரிடத்திலே விசாரித்திருக்கலாம். ஆனால் அவர்கள் அதை செய்யவில்லை. மாறாக இது கடினமான உபதேசம், யார் இதை கேட்பார்கள் என்றுக்கூறி பின்வாங்கினார்கள். பாருங்கள் அது முதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனே கூட நடவாமல் பின்வாங்கிப்போனார்கள். (யோ.6:66) அதாவது எகிப்துக்கு திரும்பினார்கள். தங்களுக்கு ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டார்கள். இந்நாட்களில் தீர்க்கதரிசி / ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்தியை விட்டு விலகி, காக்குவ் பிலிப்பை பற்றிக்கொண்டதுபோல். இந்த சிங்கப்பூர் - ரீச்சர்டு கேன், நைனிட்டால் - டால்டன் புரூஸ், ஆப்ரிக்கா - காக்குவ் பிலிப்பை பற்றிக்கொண்டவர்கள் அனைவரும் அவிசுவாசிகளே. தங்களது பந்தயப்பொருளை இழந்தவர்களே. இவர்களுக்கு கர்த்தருடைய வசனத்தின் மேல் விருப்பம் இல்லை. தங்கள் வாயினால் கர்த்தரிடத்தில் சேர்ந்தார்களேயன்றி, அவர்களுடைய இருதயம் மாறுபாடானவைகளை பின்பற்றி அவருக்கு தூரமாய் விலகிப்போனார்கள். (மத்.15:8) இவர்களுடைய செவி விருத்தசேதனம் இல்லாதது. கர்த்தருடைய வார்த்தை இவர்களுக்கு நிந்தையாயிருந்தது. அது அவர்களுக்கு விருப்பம் இல்லை. (எரே.6:10) ஆதலால் அவர்களுக்கு தேவனுடைய வார்த்தையின் மீது விருப்பம் இல்லை. கடிந்துக்கொள்கிறவனை பகைக்கிறார்கள். கடிந்து கண்டனம் பண்ணி புத்தி சொல்கிறவனை எங்கள் சபைக்கு வராதே என்கிறார்கள். இந்த அவிசுவாசிகள் யாவரும் இம்மைக்காக மாத்திரம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை உள்ளவர்கள். இவர்கள் எல்லா மனுஷர்களை பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்கள். (1கொரி.15:19) இவர்கள் ஜனங்கள் கூடிவருகிற வழக்கத்தின்படியே சபைக்குவந்து, தேவனுக்கு முன்பாக அவருடைய ஜனங்கள்போல், பக்திவைராக்கியமுள்ள ஒரு விசுவாசியைப்போல் வெண்ணிற ஆடையில் வந்து அமர்ந்து, பாஸ்டர் பிரசங்கம் செய்யும் போது அல்லேலூயா! ஸ்தோத்திரம்! என முழக்கமிடுவார்கள். ஒரே கைத்தட்டல், ஆரவாரம் இதற்கு ஒன்றும் குறைவு இல்லை. வசனத்தை மிக்க கவனமாக கேட்பார்கள். ஆனால் கேட்ட வசனத்தின்படி கிரியைகளினால் தங்களை பிரதிபலிக்கமாட்டார்கள். தங்கள் வாயினால் மிக்க இனிமையாக சகோதரனே, சகோதரியே என்று சுத்த இருதயத்தோடல்லாது மாயையான சகோதரசிநேகத்துடன் பேசுவார்கள். தங்களுக்கு ஆத்தும நன்மைகளை கொடுக்கிறவனுக்கு தங்கள் சரீர நன்மைகளை கொடுக்கமாட்டார்கள். உடன் சகோதரன் கஷ்டத்தில் இருக்கும் வேளையில், வறுமையில் இருக்கும் நேரத்தில், பண நெருக்கடியின் இக்கட்டில் அவனுக்கு உதவிசெய்ய மாட்டார்கள். மாறாக சகோதரனே நான் உங்களுக்கு உபவாசம் செய்து ஜெபிக்கிறேன், போய்வாருங்கள் என்பார்கள். தியானியுங்கள். (எரே.33:31) இவர்களுக்கு இப்பிரபஞ்சத்தின் மேல்தான் ஆசை. தங்கள் இருதயத்தின் இச்சைகளின் படியே நடக்கிறார்கள். (எசே.11:21) கர்த்தர் தமது ஜனத்தை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணி, இரட்சித்து, பின்பு விசுவாசியாதவர்களை அழித்தார். (யூதா:5) இதுதான் அவிசுவாசிகளின் நிலை. இவர்கள் இம்மைக்குரிய நன்மைகளுக்காக மாத்திரமே கர்த்தரை தேடும் பரிதபிக்கப்படதக்கவர்களுமாயிருக்கிறார்கள். இவர்களில் அநேகர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதின் காரணம் அவர்கள் தாங்கள் சார்ந்துள்ள ஸ்தாபன சபைகளிலிருந்து பெறும் உதவிகளே. சிலர் ஸ்தாபன சபைகளினால் நடத்தப்படும் கல்லூரி, பள்ளி மருத்துவமனைகளில் தங்கள் வேலைகளை தக்கவைத்துக்கொள்ளவே கிறிஸ்துவின் மேல் விசுவாசம் கொண்டிருப்பார்கள். சிலர் தங்கள் வீட்டு வாடகை, பிள்ளைகளின் படிப்பு போன்ற உதவிகளுக்காக சபைகளை சார்ந்திருக்கிறார்கள். ஒருமுறை நான் ஒரு சபைக்கு சென்றிருந்தேன். ஆராதனை முடிந்தவுடன் பஸ் நிலையத்திற்கு வந்தேன். அங்கு சபைகூடுதலுக்கு வந்த சில மக்கள் காணப்பட்டனர். அவர்கள் என்னிடம் சகோதரனே நீங்கள் சபையில் பிரசங்கித்ததில் உண்மைகள் உண்டு. நாங்கள் பல இடங்களிலிருந்து சபைகூடுதலுக்கு வருகிறோம். பாஸ்டர் எங்களுக்கு வீட்டுவாடகை, பிள்ளைகளின் படிப்புக்கு பணஉதவி, சபைகூடுதலுக்குவர போக்குவரத்து பஸ் செலவு போன்றவைகளை கொடுப்பதினால் தான் வருகிறோம். ஆனால் எங்கள் பாஸ்டர் பலே கில்லாடி எங்களுக்கு ஐந்நூறு செலவு செய்துவிட்டு, கணக்கில் ஆயிரம் எழுதிவிடுவார், அவருக்கு பொருளாதார உதவி பல இடங்களிலிருந்து வருகிறது என்றார்கள். இது உண்மைதான். மற்றொருரிடத்தில் நான் பார்த்ததாவது, தனது சபைக்கு வரும் சுமார் 10,15 பேர்களையும் அவரவர் இருப்பிடம் சென்று வாகனத்தில் அழைத்துவந்து சபைகூடுதலுக்கு கூட்டம் சேர்க்கிறார் பாஸ்டர். பின் மதியம் ஒரு மினி சாப்பாடு. இதற்காகத்தான் மக்கள் சபைகூடுதலுக்கு வருகிறார்கள். இம்மைக்குரிய நன்மைகளை பெறவே இவர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள். ஸ்தாபன சபைகள் முழுவதும் அவிசுவாசிகளே நிறைந்திருக்கிறார்கள். ஸ்தாபன சபைகள் யாவும் அவிசுவாசிகளின் பிழைப்புக்கடுத்த தொழிற்க்கூடமாக, வியாபார ஸ்தலமாக மாறிவிட்டது. அங்கு தேவனுடைய வார்த்தை இல்லை.

13. **பாவனை விசுவாசி.** இதற்கு அப். யூதாஸ் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறான். இவனை ஒரு அப்போஸ்தலனாக இயேசு கிறிஸ்து தெரிந்துக்கொண்டார். அற்புத அடையாளங்களை செய்ய இவன் அதிகாரம் பெற்றான். ஆனாலும் பொருளாசையின் நிமித்தமாக 30 வெள்ளிக்காசுக்காக இயேசுவை முத்தமிட்டு காட்டிக்கொடுத்தான். (லூக்.12:48) இன்றைக்கும் தங்களை கிறிஸ்தவர்கள் / மணவாட்டி என்றுக்கூறிக்கொண்டு பொருளாசையினால் தாங்கள் அறிந்த சத்தியத்தை மறுதலிப்பவர்கள் அநேகர். இது என்ன? தங்களை கிரயத்திற்காக மீட்டுக்கொண்டவரை மறுதலிக்கிறார்கள். தங்களது கிரியைகளினால் இயேசு கிறிஸ்துவை மறுதலிக்கிறார்கள். இவர்களை குறித்து : அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோம் என்று அறிக்கை பண்ணுகிறார்கள், கிரியைகளினாலோ அவரை மறுதலிக்கிறார்கள், இவர்கள் அருவருக்கப்படத்தக்கவர்கள். இவர்கள் கீழ்படியாதவர்கள், இவர்கள் எந்த நற்கிரியையும் செய்ய ஆகாதவர்கள் என தீத்.1:16-ல் காண்கிறோம். கிரியைகள் இல்லாத இவர்களது விசுவாசம் செத்தது. (யாக்.2:17-24) யூதாஸ் : இயேசு கிறிஸ்துவை விசுவாசித்ததினால் நீதிமானாக்கப்பட்டவன். பரிசுத்த ஜீவியம் இவனிடத்தில் இருந்ததும் உண்மைதான். ஆனால் அவன் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெறவில்லை. அதுதான் காரியம். ஆதலால் அவன் இயேசுவுக்கு கொடுத்த முத்தம் வஞ்சனையுள்ளதாக இருந்தது. (நீதி.27:6) இன்று கிறிஸ்தவர்கள் மத்தியில் அநேகர் அவருக்கு வஞ்சனையான முத்தம் தான் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

14. இந்த அவிசுவாசியும், பாவனைவிசுவாசியும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன்னுடைய பாவங்களுக்காக மரித்தார், அடக்கம்பண்ணப்பட்டார், உயிர்தெழுந்தார் என்று விசுவாசிக்கும் விசுவாசிகள்தான். அதோடுமட்டுமல்ல தங்கள் பாவமன்னிப்புக்காக, அதாவது தாங்கள் அதுவரை செய்த எல்லா பாவங்கள், அக்கிரமங்கள் மன்னிப்புக்காக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்களாக இருக்கலாம். அற்புத அடையாளங்களை செய்கிறவர்களாகவும் இருக்கலாம். சபைகூடுதலுக்கு ஒழுங்காக சென்றுவரும் விசுவாசிகளாகவும் இருக்கலாம். விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும். (மாற்.9:23) விசுவாசம் என்பது பெரியகாரியங்களை நடப்பிக்கும். ஆனால் அவைகள் அனைத்தும் ஆவிக்குரியவைகளாக இராது. கர்த்தாவே நான் உமது நாமத்தினால் வியாதியஸ்தர்களை

சுகமாக்கினேன். என்னுடைய கூட்டத்தில் இலட்சக்கணக்கான ஜனங்கள் கூடினார்கள். என் பாடல்களில் மக்கள் மதிமயங்கினார்கள், பிசாசுகள் ஓடின என்பார்கள். ஆனால் கர்த்தரோ அக்கிரம செய்கைகாரர்களே என்னை விட்டு அகன்று போங்கள், நான் உங்களை அறியேன் என்பார். அது தான் அதன் முடிவு. அகன்று போங்கள் எங்கே? அவர்கள் அக்கினி கடலிலே தள்ளப்படுவார்கள். ஒரு காரியத்தை வேதவாக்கியங்களின்படி அறிந்திருந்தும், அதை செய்யாமல் இருப்பது தான் அக்கிரமம். அனனியாவையும், அவன் மனைவி சப்பீராளையும் கவனியுங்கள். விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தால் ஒரே இருதயமும் ஒரே மனமுள்ளவர்களாயும் இருந்தார்கள். தங்கள் நிலங்களையும் வீடுகளையும் விற்று, கிரயத்தைக் கொண்டுவந்து அப்போஸ்தலர்களுடைய பாதத்திலே வைத்தார்கள். சகலமும் அவர்களுக்கு பொதுவாக இருந்தது. அவனவனுக்கு தேவையாயிருந்ததற்குத்தக்கதாய் பகிர்ந்துக்கொடுக்கப்பட்டது. ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாய் இருந்தது இல்லை. இந்நிலையில் அனனியாவும், சப்பீராளும் தங்கள் காணியாட்சியை விற்றார்கள். அனனியா தன் மனைவி அறிய கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, ஒரு பங்கை அப்போஸ்தலர்களுடைய பாதத்திலே வைத்தான். (அப்.5:1-11) ஏனென்றால் இவன் ஒரு பாவனை விசுவாசியாகயிருந்தான். உண்மையான மனந்திரும்புதல் இவனிடத்தில் இல்லை. ஒரு கிறிஸ்தவன் போல் பாசாங்கு செய்தான். பரிசுத்த ஆவிக்கு விரோதமாக சாத்தான் அவர்களின் இருதயத்தை நிரப்பினான். பாருங்கள் யூதாஸ்குள்ளும் சாத்தான் புகுந்தான். 30 வெள்ளிக்காசுக்காக அவன் இயேசுவை காட்டிக்கொடுத்தான். அடுத்து அந்த சீமோன் என்ற மாயவித்தைக்காரனும் பிலிப்பு செய்த பிரசங்கத்தை கேட்டான். விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றான். பேதுரு செய்த அற்புதங்களைக் கண்டான். அவனிடத்தில் பணத்தைக்கொண்டுவந்து அற்புதங்களை செய்ய அதிகாரம் தனக்கு கொடுக்கப்பட வேண்டும் என்றுக்கேட்டான். தேவனுடைய வரத்தை பணத்தினால் சம்பாதிக்க நினைத்தான். அவன் இருதயம் தேவனுக்கு முன்பாக செம்மையாக இல்லை. அவன் கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருந்தான். (அப்.8அதி) மாயவித்தைகாரனாகிய சீமோன் ஒரு பாவனை விசுவாசியாகவே இருந்தான். அவன் உத்தம இருதயத்தோடு தேவனிடத்தில் திரும்பவில்லை. பாவனை விசுவாசிகளும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் அற்புத அடையாளங்களை செய்யலாம். ஏனெனில் அழைப்பும், வரங்களும் ஒருவன் மனந்திரும்பாத நிலையிலும் அவனிடத்தில் கிரியை செய்யும். (ரோ.11-29) எப்படியெனில் சூரியன் நல்லோர்மீதும், தீயோர்மீதும் உதிக்கிறது. இருவரும் சூரியனின் பலனை அடைகிறார்கள். அதுப்போன்று மழையும் நீதி மற்றும் அநீதி உள்ளவர்கள் மேல் பெய்கிறது. ஒரே மழையினால் களையும், கோதுமையும் வளர்கிறது. இந்த விசுவாசம் பெரிய காரியங்களை செய்யும். ஆனால் அவையனைத்தும் ஆவிக்குரியதாக இராது. விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும். (மாற்.9:23) இவர்கள் பாவனை விசுவாசிகளாகயிருந்து அற்புத அடையாளங்களை செய்ததினால்தான் கர்த்தர் இவர்களை நோக்கி : நான் ஒருகாலும் உங்களை அறியேன். அக்கிரமசெய்கைகாரர்களே என்னைவிட்டு அகன்று போங்கள் என்றார். (மத்.5:48,7:22-23).

15. **இப்பொழுது மூன்று விதமான சுபாவங்களையுடைய மனிதர்களை குறித்து தியானிப்போம்.**

**ஜென்மசுபாவமான மனுஷன் :** ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்தில் பிரவேசித்தது. (ரோ.5:12) இதனால் தான் என் தாய் என்னை பாவத்தில் கர்ப்பந்தரித்தாள். நான் துர்குணத்தில் உருவானேன் என தாவீது கூறுகிறான். (சங்.51:5) இந்த உலகமானது பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. (1யோ.5:19) ஆதலால் இவர்கள் பெற்றிருப்பது இந்த உலகத்தின் ஆவி. (1கொரி.2:12) ஆதலால் மனிதர்கள் அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாக காணப்படுகிறார்கள். (எபே.2:1) ஆதலால் இவர்களிடத்தில் கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை காணப்படுகிறது. (1யோ.2:16) இவைகள் யாவும் தேவனால் உண்டானது அல்ல. மாறாக உலகத்தினால் உண்டானது. ஆதலால் இந்த உலகம் தன் சுயஞானத்தினால் தேவனை அறியாது. (1கொரி.1:21) ஆதலால் இந்த ஜென்மசுபாவமான மக்கள் தேவனை அறியவில்லை. (கலா.4:8) ஆதலால் இவர்கள் தேவன் இல்லை என்று சொல்கிறார்கள். இவர்கள் மதிக்கெட்டவர்கள் என்று சங்கீதகாரன் கூறுகிறான். (சங்.14:1) இதினால் இவர்கள் தேவனுடைய ஆவி இல்லாதவர்கள் என நாம் முடிவெடுக்கலாம். ஆதலால் இவர்கள் தங்கள் துன்மார்க்கமான இச்சைகளின்படி நடந்துவரும் பரியாசக்காரர்கள். ஆதலால் இவர்கள் ஜென்மசுபாவமான மனுஷர்கள் மற்றும் தேவனுடைய ஆவி இல்லாதவர்கள் என யூதா எழுதுகிறான். (யூதா:18,19) இவர்கள் சத்தியத்திற்கு விரோதமாய் பொய் சொல்லுகிறவர்கள். (யாக்.3:13-16) சத்தியத்திற்கு எதிர்த்து நிற்பவர்கள் (2தீமோ.3:18) இவர்கள் உலகத்திற்குரியவர்களாக இருப்பதால் உலகம் இவர்களுக்கு செவி கொடுக்கும். (1யோ.4:5) இவர்களிடம் தேவனுடைய ஆவி இல்லாததால் மனுஷஆவியைக்கொண்டு மனுஷஞானத்தின்படியே பேசுவார்கள். (1கொரி.2:13) இவர்களுடைய வாழ்க்கை உலகபிரகாரமான சடங்காச்சாரங்கள், பாரம்பரியங்களை சார்ந்தே இருக்கும். இவர்கள் அஞ்சனம் பார்ப்பார்கள். நாட்களிலும் நல்லது கெட்டது என தீர்மானிப்பார்கள். செவ்வாய், வெள்ளி அசைவம் சாப்பிடமாட்டோம் என்பார்கள். நாட்கள், நட்சத்திரங்களைப் பார்த்து திருமணக்காரியங்களை நிச்சயம் செய்வார்கள். இப்படியாக உலகம் இவர்கள் உள்ளத்தில் இருக்கும். உலகமக்களோடு உலகமக்களாய் வாழ்வார்கள். ஆதலால் இவர்களிடத்தில் கண்களின் இச்சைகள், மாம்சத்தின் இச்சைகள், ஜீவனத்தின் பெருமைகள் குடிகொண்டிருக்கும். இவர்கள் அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்கள். தங்களது மாம்ச இச்சையின்படியே நடந்து மாம்சமும் மனதும் விரும்பினவைகளை செய்து சுபாவத்திலே கோபாக்கினையின் பிள்ளைகளாக இருப்பார்கள். கடைசி காலத்திலே தங்கள் துன்மார்க்கமான இச்சைகளின்படி நடக்கிற பரியாசக்காரர்கள் தோன்றுவார்கள் என்று யூதா எழுதுவது இவர்களை குறித்துத்தான். பாவத்தில் பிறந்து, வளர்ந்து இவர்கள் பாவியாகவே முடிவில் மரிக்கிறார்கள். இவர்கள் பிறப்பிலே வெள்ளாடுகளாக இருப்பதால் இவர்கள் சபிக்கப்பட்டவர்கள். பிசாசுக்கும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியில் பங்கடைவார்கள். இவர்கள் பெயர் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்படவே இல்லை. மாறாக புஸ்தகங்களில் இவர்கள் பெயர் உண்டு.

16. **மாம்சத்துக்குரியவர்கள் :** இவர்கள் தங்களை கிறிஸ்தவர்கள், இரட்சிக்கப்பட்டவர்கள், ஆவிக்குரியவர்கள் என்று பலவாறு அழைத்து அலங்கரித்து கொண்டாலும் முடிவில் மாம்சத்தின்படி நடக்கிறவர்களாகவே இருக்கிறார்கள். (ரோ.8:1) இவர்களை அப். பவுல் பன்னிரெண்டாவது வசனத்தில் சகோதரரே என்று அழைக்கிறான். அதேவேளையில் இவர்கள் ஆவிக்குரியவர்கள் அல்ல என்று குறைபட்டுக்கொள்கிறான். (1கொரி.3:1) ஆதலால் இவர்களை மாம்சத்துக்குரியவர்கள் என்று அழைக்கிறான். இவர்கள் ஜலத்தினால் பிறந்தவர்கள் தான். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள் தான். ஜலத்தினால் பிறந்து இரத்தத்தினால் கழுவி சுத்திகரிக்கப்பட்ட பரிசுத்தவான்கள் தான். ஆனால் இவர்கள் பரிசுத்த ஆவியினால் பிறக்கவில்லை, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெறவில்லை. பாருங்கள் கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன் அவருடையவன் அல்ல. (ரோ.8:9) இவர்கள் மாம்சத்துக்குட்பட்டவர்கள். இவர்களிடத்தில் விசுவாசம் இருக்கும். ஆனால் கிரியைகள் இருக்காது. ஆதலால் இவர்களுடைய விசுவாசமானது செத்தது. ஆதலால் இவர்கள் தேவனுக்கு பிரியமாகவும் இருக்க மாட்டார்கள். இவர்கள் நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவர்கள். (எபி.5:13,14) இவர்கள் தேவனுடைய வார்த்தையில் பழக்கமில்லாதவர்கள். இவர்கள் தங்கள் சபைகாலத்தின் செய்தியில் பழக்கமில்லாதவர்கள். ஆதலால் இவர்களால் எது சரி எது தவறு என்று நிதானிக்கமுடியவில்லை. ஆனாலும் இவர்கள் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறதாக கூறுகிறார்கள். நம்முடைய சகோதரர்கள் மும்பை டேனியேல் கிறிஸ்டியான் மற்றும் சென்னை வளசரவாக்கம் சாமுவேல் போன்றவர்கள் கூறுவதுபோன்று. ஆனால் இவர்கள் தேவனுடைய வார்த்தையை அறியவேண்டிய பிரகாரமாக அதை அறிந்துக்கொள்ளவில்லை என (1கொரி.8:2) கூறுகிறது. மேலும் இந்த மாம்சத்துக்குரியவர்கள் மத்தியில் டாக்டர்கள் உண்டு.

பிஷப்கள் உண்டு, தலைமை போதகர்கள் உண்டு, உலகம் சுற்றும் ஊழியர்கள் உண்டு. வல்லமையான பிரசிங்கிமார்கள் உண்டு. உயர்ந்த உத்தியோகத்தில் உள்ளவர்கள் உண்டு. ஆனால் இவர்களிடத்தில் ஆவிக்குரிய வெளிப்பாடுகள் கிடையாது. அது இவர்களுக்கு மறைக்கப்பட்டிருக்கிறது. (மத்.11:25) ஆவிக்குரியவர்கள் ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடு சம்பந்தப்படுத்தி காண்பிக்கும் போது அதை இவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மேலும் இவர்களால் அதை கிரகித்துக் கொள்ளமுடியவில்லை. அவர்கள் பெற்ற கல்வி, உத்தியோகம், மேட்டிமையான எண்ணங்கள் அதற்கு தடையாக இருக்கிறது. ஏனென்றால் வேதவசனமானது தேவன் தம்மை கல்விமான்களுக்கும் ஞானிகளுக்கும் மறைத்து பாலகர்களுக்கு வெளிப்படுத்துகிறார் எனக்கூறுகிறது. ஆதலால் தான் இவர்கள் தேவத்துவத்தில் மூவர் உண்டு, (Three persons in one God) என உபதேசிக்கிறார்கள். அதோடுமட்டுமல்லாது தங்களது மாறுபாடான உபதேசங்களினால் ஒருவன் தன் பாவமன்னிப்பை பெறவிடாமல் தடை செய்கிறார்கள். பலவிதமான பண்டிகைகள், கிறிஸ்துமஸ், ஈஸ்டர், பெரிய வெள்ளி, கல்லறை திருநாள், திடப்படுத்துதல் போன்ற வேதவாக்கியங்களில் காணப்படாத அநேக சடங்காசாரங்களை ஆசரிக்கிறார்கள். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்கு அந்நியபாஷை அடையாளம் என்கிறார்கள். ஆனால் இதற்கு வேதவாக்கியங்களில் எங்கும் ஆதாரங்கள் கிடையாது. அந்நியபாஷை பெயரில் ஏதேதோ உளருகிறார்கள். மக்களை குழப்புகிறார்கள். மக்களை வஞ்சிக்கிறார்கள். பரிசுத்த ஆவியை பெறாத பெந்தெகொஸ்தேகாரரிடம் ஆவியின் அருக்கிரகமான அந்நியபாஷை வரம் எப்படி கிரியை செய்யும்? ஆதலால் நம் மத்தியில் காணப்படும் பெந்தெகொஸ்தே நண்பர்கள் யாவரும் பிசாசின் ஆவியைக்கொண்டே அந்நிய பாஷை பேசுகிறார்கள். ஆக திருத்துவ ஸ்தாபன சபைத்தலைவர்கள், போதகர்கள், விசுவாசிகள் அனைவரும் மாம்சத்துக்குரியவர்களே. ஆனால் இவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளதினால் இவர்கள் பெயர்கள் ஜீவபுஸ்தகத்தில் காணப்பட்டாலும், இவர்களது அக்கிரம செயல்பாடுகளைக்கொண்டு இவர்கள் பெயர்கள் கிறுக்கப்பட வாய்ப்புகள் உள்ளது. ஆனால் எக்காரணத்தைக்கொண்டும் இவர்கள் பெயர்கள் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் இல்லை.

17. மனுஷகுமாரனுடைய மாம்சத்தை புசியாமலும், அவருடைய இரத்தத்தை பானம் பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவன் இல்லை என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன். (யோ.6:53) என் மாம்சத்தை புசித்து, என் இரத்தத்தை பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. (யோ.6:54) என் மாம்சம் மெய்யான போஜனம். என் இரத்தம் மெய்யான பானம். ஓ! இது கடினமான உபதேசம். ஆதலால் இதன்பேரில் பிரிவினையை கொண்டுவந்தார்கள். ஒரு கிறிஸ்தவன் கர்த்தருக்குரிய தசமபாகத்தை அவன் ஆவிக்குரிய மன்னாவை பெற்றுவரும் சபைக்குக்கொண்டு செலுத்தவேண்டும். அது அங்கிருந்து பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். ஆனால் ஒருவன் என் குடும்பத்தில் கஷ்டம், பாடு, சம்பளம் பத்தவில்லை. இந்நிலையில் பத்தில் ஒன்றை எப்படி நான் செலுத்த முடியும், இது கஷ்டமான காரியம். ஆதலால் என் மனைவியை வேலைக்கு அனுப்பாவிட்டால் நாங்கள் உயிர்வாழ முடியாது. ஆதலால் மனைவியை வேலைக்கு அனுப்புவதை விட்டு வேறு வழியில்லை என்கிறார்கள். கலியாண வீட்டிற்கு மற்றும் பொது வைபவங்களுக்கு வரும் பெண்கள் பட்டுப்புடவைக்கட்டி கழுத்திலும், கையிலும் பொன் ஆபரணங்களை அணிந்து வருகிறார்கள். நான் மட்டும் மூளியாக அங்கு சென்று பார்வைக்கு விகர்ப்பமாக தோன்றுவதா? முடியாது. நான் நகை அணியத்தான் வேண்டும். இது ஒரு பெண்ணை அழகுப்படுத்துகிறது. இப்படியாக பெண்களினால் சபை உபதேசங்களுக்கடுத்த காரியங்களில் பிரிவினைகள் / பேதங்கள். இதற்கெல்லாம் காரணம் என்ன? இவர்கள் மாம்சத்துக்குரியவர்கள் மாம்சத்தின்படி சிந்திக்கிறார்கள். மாம்சத்தின்படி நடக்கிறார்கள். இவர்களை வழிநடத்த இவர்களிடம் பரிசுத்த ஆவியில்லை. **இந்த மாம்சத்துக்குரியவர்களால்தான் அன்றும் இன்றும் சபைகளில் குழப்பம்.** அது என்றும் அப்படியே இருக்கும். இவர்கள் தங்களை விசுவாசிகள் என்று அழைத்துக்கொண்டு வேறுவிதமாய் நடக்கிறார்கள். இந்நாட்களில் ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்தியைக்கொண்டு எத்தனையோ பிரிவினைகள், குழப்பங்கள். அங்குள்ள மாம்சத்துக்குரியவர்களால்தான் இத்தனை பிரச்சனைகள் உண்டாகிறது. இவர்கள் லௌகிக ஞானத்தைக்கொண்டு மாம்சசிந்தையின்படி தேவனுடைய வார்த்தைக்கும், இக்காலத்திற்குரிய செய்திக்கும் விளக்கம் கொடுப்பதால், வியாக்கியனம் பண்ணுவதால், செய்திகளை மொழிப்பெயர்ப்பதால் இத்தனை குழப்பங்கள்.

18. ஏழாம் சபைக்கால தூதனைக்கொண்டு, அவர் சபைக்கு கொண்டுவந்த செய்திகளை கொண்டு நாளுக்குநாள் புதுபுது உபதேசங்கள் வெளிநாடுளிலிருந்து இந்தியாவுக்கு முக்கியமாக தமிழ்நாட்டிற்கு இறக்குமதியாகிறது. இங்கு பல அன்னக்காவடிகள் உண்டு. இவர்கள் அவர்களுக்கு கூலிக்காக மாரடிக்கிறார்கள். இதில் அனுபவம் உள்ளவர்கள் தங்கள் பொருளாதார நிலையை மேம்படுத்திக்கொள்கிறார்கள். பிரியமானவர்களே நாம் கடைசி நாளுக்கு கடந்து சென்றுக்கொண்டிருக்கிறோம். அந்த மணிநேரம் இங்கே இருக்கிறது. அவர்கள் அது, இது, மற்றது என்றெல்லாம் கூறுகின்றனர். ஆனால் அவைகள் வேதவாக்கியங்களின் அடிப்படையில் அதிகாரபூர்வமாக இல்லாதவரை அவைகளை நம்பவேண்டாம், ஏற்றுக்கொள்ள வேண்டாம், விசுவாசிக்க வேண்டாம். நமது தமிழ்நாட்டு ஏஜெண்டுகள் குறித்து ஏற்கெனவே எழுதியுள்ளேன். பொருளாசையில் பழகின இருதயத்தை உடைய சாபத்தின் பிள்ளைகள் ஊழியத்தின் பேரில் பலவிதமான திட்டங்களை, உபதேசங்களை, போதனைகளை கொண்டுவந்து வஞ்சகமாய் நடந்து மக்களை ஏமாற்றுகிறார்கள். இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது. (யூதா:13)

19. இந்நாட்களில் அநேக மாம்சத்துக்குரியவர்கள் தங்களை ஐந்துவகை ஊழியத்தில் ஒன்றைக்கூறி அழைக்கிறார்கள். பொதுவாக தங்களை மேய்ப்பன் என்று அழைப்பவர்கள் அநேகர். இவர்களில் பெரும்பான்மையானோர் தங்களது ஊழியத்தில் தோல்வியே காண்கிறார்கள். தன் வீட்டாரைக்கொண்டு, நண்பர்களைக்கொண்டு, உறவினர்களைக்கொண்டு சுமார் 5-10 நபர்களை கொண்டு சபைகூடுதல் பெயரில் காலத்தை கடத்துகிறார்கள். எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை. சில இடங்களில் தொடக்கம் 10-ல் ஆரம்பித்து, பின் பாஸ்டர், பாஸ்டரின் மனைவியாக இரண்டு பேரில் முடிகிறது. இதற்கு காரணம் என்ன? இவர்கள் ஒரு காகமாக இருந்துக்கொண்டு, மயில் இறகுகளை போர்த்திக்கொண்டு, தங்களை ஒரு மயிலாக காண்பிக்க முயற்சிக்கிறார்கள். தான் ஒரு ஓநாயாக இருந்துக்கொண்டு, ஆட்டுத்தோலை போர்த்திக்கொண்டு, தன்னை ஒரு ஆடுவாக காட்ட முயற்சிக்கிறார். ஆனால் தேவன் இவர்களை அழைக்கவே இல்லை. தேவன் இவர்களை அழைத்திருப்பாராகில் இவர்களை அவர்களுடைய அழைப்புக்கேற்றபடி பண்படுத்தி, பயன்படுத்துவது அவருக்கடுத்த காரியம். இவர்கள் ஒன்றையும் முயற்சிக்க வேண்டிய தேவையில்லை. பாருங்கள் நீங்கள் என்னை தெரிந்துக்கொள்ளவில்லை, நான் உங்களை தெரிந்துக்கொண்டேன். (யோ.15:16) ஒரு பசு, தன் மடுவிலிருந்து பாலை சுரக்க முயற்சிக்க வேண்டிய தேவையில்லை. அது தானாகவே சுரக்கும். ஒரு ஆடு தன் மயிரை வளர்க்க முயற்சிக்க வேண்டிய தேவையில்லை. அது தானாகவே வளரும். ஏனென்றால் மயிரை கொடுக்க வேண்டியது ஆட்டினுடைய சுபாவம். ஒரு மயில் தன் சிறகை விரித்து ஆட முயற்சிக்க வேண்டிய தேவையில்லை. சிறகை விரித்து ஆடுவது அதன் சுபாவம். ஆக இந்த மாம்சத்துக்குரியவர்கள் தங்களை ஆவிக்குரியவர்கள் போன்று நினைத்துக்கொண்டு பல காரியங்களை முயற்சி செய்து முடிவில் தோல்வியை காண்கிறார்கள். இவர்களால் தேவனுடைய நாமம் தூஷிக்கப்படுகிறது.

20. **இந்த மாம்சத்துக்குரியவர்களின் விபரீதமான உபதேசங்களுக்கு ஒரிரு எடுத்துக்காட்டுகள்.**

(அ) லவோதிக்கேயா சபைகால தூதனும், தீர்க்கதரிசியுமாகிய சகோ. வில்லியம் மாரியன் பிரன்ஹாம் அவர்கள் மார்ச் 17, 1963 முதல் மார்ச் 25, 1963 வரை பிரசிங்கித்த செய்திகளைக்கொண்ட ஏழுமுத்திரைகளின் வெளிப்பாடு (The Revelation of the seven seals) புத்தகம் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதைக்கொண்டது என்கிறார்கள். இதுக்குறித்து கோயம்புத்தூரில் இருந்து ஒரு சகோதரன் ஒரிரு ஆண்டுகளுக்கு முன்பு பேசினார். அவர் கருத்து தவறு என்பதை அன்றே அவருக்கு எடுத்துக்கூறினேன். நீங்கள் இப்பொழுது ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு என்ற புத்தகத்தின் கடைசி பக்கம் 982 பத்தி 413-க்கு என்னுடன் வாருங்கள். இங்கு சகோ பிரன்ஹாம் கூறுகிறதாவது : இப்பொழுது, தரிசனமும், வார்த்தையும், சரித்திரமும், சபையின் காலங்களும் ஒன்றோடோன்று இணைகின்றன. தேவனுடைய வார்த்தையின்படியும், அவருடைய தரிசனத்தின்படியும், வெளிப்பாட்டின்படியும், உங்களுக்கு அளிக்கப்பட்ட வியாக்கியானம் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதாகும். இது ஆங்கிலத்தில் (Now, the vision, plus the word, plus the history, plus the church age, all blend together, so, I could truly say, that, to the best of my understanding, and according to the word of God, and the vision, and the revelation, the interpretation thereof is THUS SAITH THE LORD. இப்பொழுது இதனுடைய சரியான விளக்கம் என்ன? தேவனுடைய வார்த்தையின்படி (According to the word of God) அந்த தரிசனம் (The Vision) அந்த வெளிப்பாடு (The Revelation) அதனுடையதான பொருள் விளக்கம் ( The Interpretaion thereof) சகோ பிரன்ஹாமுடைய புரிந்துக்கொள்ளும் அறிவாற்றலின்படி (To the best understanding of brother Branham) **கர்த்தர் உரைக்கிறதாவது** (Thus Saith the Lord) என்பதாகும். இங்கு சகோ பிரன்ஹாம் ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு புத்தகம் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்று கூறவில்லை. மாறாக அவர் தான் கண்ட தரிசனங்கள், பெற்ற வெளிப்பாடுகள், பொருள் விளக்கங்கள் யாவும் தன் புரிந்துக்கொள்ளும் அறிவாற்றலின்படி **கர்த்தர் உரைக்கிறதாவது** என்று கூறுகிறாரேயன்றி ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு புத்தகம் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்று கூறவில்லை. இப்படிதான் நம் மத்தியில் மாம்சத்துக்குரியவர்கள் தவறான சிந்தையோடு ஒரு காரியத்தை புரிந்து குழப்பத்தை உண்டுபண்ணுகிறார்கள். தவறான விளக்கம், தவறான வியாக்கியானம்.

(ஆ) சிலர் சகோ வில்லியம் மாரியன் பிரன்ஹாம் கர்த்தராகிய பிரன்ஹாம் கிறிஸ்து என்று தங்கள் இருதயத்தில் எழுந்த வாயின் வார்த்தைகளினால் அழைக்கிறார்கள். அறிக்கையிடுகிறார்கள். இருதயத்தில் விசுவாசிக்கிறார்கள். இவர்கள் யார்? இவர்களும் மாம்சத்துக்குரியவர்கள் / பிசாசு. இதுக்குறித்து சகோ பிரன்ஹாம் என்ன கூறுகிறார்? இந்த அற்புதங்களையெல்லாம் செய்பவர் நான் அல்ல, வரப்போகும் காரியங்களை பிழையின்றி முன்னறிவிப்பவர் நான் அல்ல. அவர் (கிறிஸ்து) இத்தகைய செயல்களை புரியும்போது நான் அவருக்குள் இருக்கிறேன். அவர் என்னை தம்முடைய சத்தமாக உபயோகித்து வருகிறார். என் மூலம் அவர் பேசுவதற்கென்று என்னை நான் அவருக்கு முற்றிலுமாக அர்பணித்துவிட்டேன். அது ஏழாம் தூதன் அல்ல. அது மனுஷகுமாரன் வெளிப்படுதலாகும். அது தூதன் அல்ல, அவருடைய செய்தி. மறைபொருளாய் இருந்த தேவனுடைய இரகசியம் வெளிப்படுதலாகும். அது மனிதன் அல்ல. அது தேவன். தூதன் மனுஷகுமாரன் அல்ல. ஆனால் அவரால் அனுப்பப்பட்ட தூதன். மனுஷகுமாரன் என்பது கிறிஸ்து (கடைசி காலத்தில் ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்கள் – பக்கம்.94, பத்தி-269 நாள். 25.7.1965) இது அப்.பவுல் கூறுவது போன்று : தம்முடைய குமாரனை புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும் பொருட்டாக அவரை (மனுஷகுமாரனை) எனக்குள் (பவுலுக்குள்) வெளிப்படுத்த சித்தமாய் இருந்தபோது (கலா.1:16) இவ்விதமாக மனுஷகுமாரன் தம்மை சகோ பிரன்ஹாமுக்குள் வெளிப்படுத்தினாரேயன்றி அவர் மனுஷ குமாரன் / கிறிஸ்து அல்ல. இதுக்குறித்து மேலும் சகோ பிரன்ஹாம் என்ன கூறுகிறார்? நான் ஊழியத்தை விட்டு விலகுகிறேன் என்று கூறும்படி நிர்பந்தப்படுத்தபட்டுள்ளேன். ஏனென்றால் ஜனங்கள் மத்தியில் ஒரு காரியம் எழும்பியுள்ளது. அதுவே நான் அவ்வாறு கூறும்படி செய்திருக்கிறது. அதென்னவெனில், நான் ஊழியக்காரன் அல்லது ஒரு சகோதரன் என்று அழைக்கப்படும் அடைப்புக்குறியிலிருந்து எடுக்கப்பட்டு இயேசு கிறிஸ்து என்று அழைக்கப்படுகிறேன். அந்த விதமாக என்னை அழைப்பது எனக்கு அந்திக்கிறிஸ்து என்ற பட்டத்தை சூட்டிவிடும். நான் அவரை (இயேசு கிறிஸ்துவை) ஒரு அந்திக்கிறிஸ்துவாக சந்தித்து, அவரைவிட்டு அகற்றப்படுவதற்கு முன்பாக, ஊழியத்தை விட்டு விலகி ஒடிப்போனவனாகவே சந்திக்க விரும்புகிறேன். (இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்தல், இரண்டாம் பாகம், தலை நசுக்கப்பட்ட சர்பம், பக்கம்.1316, பத்தி.25) ஆக சகோ பிரன்ஹாமை கிறிஸ்து என்று அறிக்கை செய்பவர்கள் அனைவரும் பிசாசின் கூட்டத்தாரே, சபையில் குழப்பங்களை உண்டுப்பண்ணும் மாம்சத்துக்குரியவர்களே. திருச்சியில் இக்காலத்திற்குரிய செய்தியில் இருக்கிறோம் என்று கூறுபவர்களில் அநேகர் இந்த பிசாசின் வஞ்சனைக்குள்தான் இருக்கிறார்கள். இங்கு உண்மையும் உத்தமுமான ஊழியகாரர்களை காண்பது அறிதாக இருக்கிறது. கூறப்போனால் காண முடியாது என்றே கூறலாம். அந்த அளவுக்கு திருச்சி, கோவை, சென்னை சபைகள் பிசாசின் பிடியில்தான் இருக்கிறது. இந்நாட்களில் திருநெல்வேலி மாவட்டமும் இந்த வஞ்சனையில் உள்ளது என அறியவந்தேன். இது விஷயமாக சில வாட்ஸ்அப் செய்திகளை நான் கண்டேன். மேலும் இதற்கு கர்நாடகம் கோலார் தங்கவயல் சபைகளும் மற்றொரு வழியில் விதிவிலக்கு அல்ல.

(இ) மூன்றாவதாக ஒரு எடுத்துக்காட்டு : கர்த்தருடைய இரண்டாம் வருகை வந்து விட்டது என்பதாகும். இது இக்காலத்திற்குரிய செய்தியின்படி எடுத்துக்கொள்ளபடுதலாகும். இதுக்குறித்து செய்தி என்ன கூறுகிறது? முதலாவது கிறிஸ்து இரத்தம் சிந்தி மரிப்பதற்கென மனிதனாக தோன்றினார். அது அவருடைய முதல் வருகை. அடுத்து எடுத்துக்கொள்ளபடுதலின்போது இரண்டாம்முறை வருகிறார். அப்பொழுது நாம் மறுரூபமாகி அவரை ஆகாயத்தில் சந்திப்போம். (ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு - நான்காம் முத்திரை, பக்கம்.521, பத்தி.210) இது பிரதான தூதனுடைய சத்தம். பிரதான தூதனுடைய சத்தம் தொனிக்கும்போது மரித்தோர் உயிரோடெழும்புகின்றனர். முற்காலங்களில் நித்திரையடைந்த மணவாட்டி உயிரோடெழும்புதல். (ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல், பத்தி.152-165)

21. இப்பொழுது கர்த்தருடைய வருகை நடந்துவிட்டது என்று உபதேசிக்கும் திருச்சி சகோ ரூபன் சபையின் மூப்பர் சகோ அந்தோணிராஜ் இதற்கு ஆதாரமாக எனக்கு கொடுத்த செய்தி பகுதிகளை கீழே தருகிறேன். நீங்கள் அதை தியானித்து, இதில் எங்கு சகோ பிரன்ஹாம் கர்த்தருடைய வருகை நடந்துவிட்டது என்று கூறுகிறார் என்பதைக் காணக்கூடுமானால் உங்கள் கண்களுக்கு கலிக்கம் போட்டு கண்டுக்கொள்ளுங்கள்.

(அ) முப்பத்துமூன்று ஆண்டுகளுக்கு முன்பு அவர் ஆற்றங்கரையில் என்ன கூறினார்? யோவான் ஸ்நானன் அனுப்பப்பட்டது போல…. பாருங்கள்? கிறிஸ்துவின் முதலாம் வருகையை அறிவிக்க யோவான் ஸ்நானன் அனுப்பப்பட்டது போல உன் செய்தி அவருடைய இரண்டாம் வருகையை அறிவிக்கும்…… அப்படியானால் வருகை சமீபமாக இருக்க வேண்டும். (காவலில் உள்ள ஆத்துமாக்கள், பக்கம்.47, பத்தி.160, நாள்.10-11-1963)

(ஆ) ஏழாவது முத்திரை திறக்கப்பட ஆயுத்தமாயிருந்தபோது ஆட்டுக்குட்டியானவர் தமது புத்தகத்தை கையில் எடுத்தார். ஆறாம் முத்திரை. அவர் நம்மிடமிருந்து ஏழாம் முத்திரையின் இரகசியத்தை மறைந்துவிட்டார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவர் அதை செய்யவில்லை. அந்த தூதன் ஒவ்வொரு நாளும் அங்கு நின்றுக்கொண்டு இரகசியங்களை சொல்லிக்கொண்டே வந்தார். ஆனால்

இதன்பேரில் மாத்திரம் ஒன்றும் சொல்லவில்லை. பரலோகத்திலே அமைதல் உண்டாயிற்று. யாருமே அறியவில்லை. அது கர்த்தருடைய வருகை. (காவலில் உள்ள ஆத்துமாக்கள், பக்கம்.60, பத்தி.208, நாள்.10-11-1963)

(இ) ஆறாம் முத்திரையின் கீழ் எல்லா ஏழு எக்காளங்களுமே முழங்குகின்றன என்பதை ஞாபகம் கொள்ளுங்கள். நாம் அதை பிரசங்கிக்கும்போது நீங்கள் அறிந்துக்கொள்வீர்கள். அந்த ஆறாம் முத்திரையில் ஏழு எக்காளங்களும் முழங்கின. ஏழு எப்பொழுதுமே பரமஇரகசியம் தான். அந்த ஏழாவதை கவனியுங்கள். அதுவே முடிவு. அது கர்த்தருடைய வருகை. பரலோகம் அமைதியாக இருந்தது. ஒருவருமே அசையவில்லை. ஏனெனில் இயேசு : நான் எப்பொழுது திரும்பிவருவேன் என்று பரலோகத்தில் உள்ள ஒரு தூதனும் அறியான். அது எந்த நேரம் என்று எனக்கே தெரியாது. தேவன் ஒருவன் மாத்திரமே அதை அவர் சிந்தையில் இரகசியாக வைத்திருக்கிறார் என்றார். தேவன் ஒருவர் மாத்திரமே அதை அறிவார்-ஆவியானவர். அப்பொழுது அது எனக்கு தெரியவில்லை. அப்பொழுது வெளிப்படுத்தப்படவில்லை. ஏழாம் எக்காளம் எப்பொழுது முழங்கினது அல்லது ஏழாம் தூதன் அல்லது முத்திரை திறக்கப்பட்டது. பரலோகத்தில் அமைதல் உண்டாயிற்று. என்ன சம்பவிக்கப்போகின்றது என்பது அறிவிக்கப்படவில்லை. (காவலில் உள்ள ஆத்துமாக்கள், பக்கம்.41, பத்தி.136,137, நாள்.10-11-1963)

(ஈ) அன்று ஆற்றங்கரையில் பிரத்தியட்சமாகி இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு உன் செய்தி முன்னோடியாய் இருக்கும் என்று உரைத்த அந்த தேவதூதன் மாத்திரம் அல்ல, கிரியைகளும் கூட சாட்சி பகருகின்றன. தேவதூதன் உரைத்தது உண்மை என்று நீங்கள் விசுவாசியாமல் போனாலும் கிரியைகளின் நிமித்தமாவது நம்புங்கள். ஏனென்றால் கடைசிகாலத்தில் இவையாவும் நிறைவேறும் என்று வேதம் உரைக்கிறது. சாட்சி கொடுப்பவை அவைகளே. (அடையாளம், பக்கம்.50,51, பத்தி.50-ல் கடைசி 51-ல் தொடக்கம். நாள்.1-09-1963)

(உ) அவர்தான் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு சிறு பையனாக, ஒரு சிறு பிரசிங்கியாக நான் நதியின் கரையில் நின்றுக்கொண்டிருந்தபோது, அதே அக்கினிஸ்தம்பம் ஒளியாக பரலோகத்தில் இருந்து இறங்கி வந்து கிறிஸ்துவின் முதல் வருகைக்கு முன்னோடியாக யோவான் ஸ்நானனை நான் அனுப்பியது போன்று உன் செய்தி அவருடைய இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக உலகம் எங்கும் செல்லும் என்று வாக்களித்துள்ளார். என் போதகர் அதைக்கேட்டபோது அது எப்படி முடியும் என்று எண்ணி நகைத்தார். ஆனால் அவர் அன்று அளித்த வாக்குத்தத்தம் எவ்வித பிழையுமின்றி நிறைவேறியது. அவர்தான் அதைச் சொன்னார், ஆம் ஐயா. (முறையிடுகிறது என்ன? சொல் பக்கம்.58, பத்தி.1, நாள்.14-07-1963)

(ஊ) ஓ! நாம் கம்பீரமான நேரத்தில் வாழ்ந்துக்கொண்டிருக்கிறோம். தீர்க்கதரிசி காட்சியிலிருந்து மறைந்த உடனே என்ன நடந்தது? கர்த்தர் காட்சியில் வந்தார். யோவான் காட்சியிலிருந்து மறைந்த உடனே கர்த்தர் காட்சியில் வந்தார். தேவன் விசித்திரமான வழியில் செயல்புரிகிறார். (தேவன் எங்களோடு இருந்தால் இந்த அற்புதங்களெல்லாம் எங்கே? பக்கம்.20, பத்தி.54, நாள்.31-12-1961)

(எ) ஏழு முத்திரைகளின் இரகசியம் வெளிப்படுவதற்கு முன்பு அந்த மகத்தான இரகசிய ஒளி நாங்கள் இருந்த டூசானில் உள்ள ஃபிளாக் ஸ்டாப்க்கு (Flag staff) மேலே வானத்தில் தோன்றின. சகோ பிரட், இரண்டு பேர் அன்று காலை என்னுடனே இருந்தனர். ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்டுள்ள வேதாகமத்தில் உள்ள ஏழு பரம இரகசியங்கள் வெளிப்படும் நேரம் வந்துவிட்டது என்றுக் கூறினான். காலங்கள்தோறும் தோன்றின சபைக்காலங்களின் தூதர்கள் அதின் சில பாகத்தை மாத்திரம் திறந்தனர். ஆனால் ஏழாம் மணிநேரத்தில் ஏழாம் தூதனின் நாட்களில் இந்த இரகசியங்கள் அனைத்தும் நிறைவேறும். அவர் குறிப்பிடுகின்ற இந்த தூதன் அப்பொழுது பூமியில் இருப்பார். தூதன் (Angel) என்றால் செய்தியைக்கொண்டுவருபவன் (Messanger) என்று பொருள். அதன்பின் வேறொரு தூதன் கீழே இறங்கிவருவதை யோவான் காண்கிறான். இது செய்தி தன்னிடம் அளிக்கப்பட்ட பூமியைச் சேர்ந்த தூதன் அல்ல. ஆனால் வேறொரு தூதன். மகத்தான தூதன் பரலோகத்தில் இருந்து இறங்கி வருகிறார். அவருடைய சிரசின் மேல் வானவில் இருந்தது. அவர் ஒரு பாதத்தை சமுத்திரத்தின் மேலும், ஒரு பாதத்தை பூமியின் மேலும் வைத்து இனி காலம் செல்லாது என்று சதா காலங்களிலும் உயிரோடு இருக்கிறவர் மேல் ஆணையிடுகிறார். பாருங்கள் அவர் ஏழு முத்திரைகளை உடைத்து அதன் இரகசியங்களை வெளிப்படுத்துவதற்கு முன்பு, அவர் அந்த அற்புதத்தை முதலில் வானத்தில் காண்பித்தார். அவர் அதை பூமியில் செய்வதற்கு முன்பே அதை வானங்களில் வெளிப்படுத்துகிறார். அவர் எப்பொழுதும் அப்படியே செய்து வருகிறார். அவர் முதலில் தமது அடையாளங்களை வானங்களில் காண்பிக்கிறார். (ஷாலோம் பத்தி.64, நாள்.12-01-1964) இதிலிருந்து பாஸ்டர் ரூபன் மற்றும் அவரது சபை மூப்பர் அந்தோனிராஜ் மற்றும் சபையார் யாவரும் மாம்சத்துக்குரியவராகவே காணப்படுகிறார்கள் என்பது தெளிவாக உள்ளது. இவர்களும் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது இல்லை. பிரவேசிக்க முயற்சிக்கிறவர்களையும் விடுவதில்லை. பாஸ்டர் ரூபன் சபை நிலை அந்தோ பரிதாபம். ஏற்கெனவே பாலாசீர்லாறியின் மணவாட்டியினால் வஞ்சிக்கப்பட்ட இந்த நபர் எப்படி தேவனுடைய மந்தையை வழிநடத்தமுடியும்? ஒருக்காலும் முடியாது.

22. அடுத்து செய்தியானது : கிறிஸ்துவின் மணவாட்டி நிச்சயமாக அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், போதகர்கள், சுவிசேஷகர்கள் மற்றும் மேய்பர்களை உடையவளாய் இருக்கிறாள். (முத்திரைகள் மீதுள்ள கே.ப.22, பக்கம்.832, பத்தி.233) அப். பவுலும் எபேசியருக்கு எழுதும்போது : நாம் அனைவரும் தேவனுடைய குமாரனை பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும் பரிசுத்தவான்கள் பூரணபடும் பொருட்டு சுவிசேஷத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும் கர்த்தர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரை தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார் என்கிறான். (எபோ.4:11-13) ஆனால் நீங்கள் சார்ந்திருக்கும் சபை மேய்ப்பர்கள் இதர நான்கு ஊழியங்களையும் தங்கள் சபையில் உபயோகப்படுத்திகிறார்களா, பயன்படுத்துகிறார்களா, சபையில் அனுமதிக்கிறார்களா? இல்லையே. இதற்கு சென்னையில் உள்ள அனைத்து சபைகளும் விதிவிலக்கு அல்ல. ஆதலால் உங்கள் சபை மேய்ப்பர்கள் யாவரும் மாம்சத்துக்குரியவர்கள்தான். ஏனென்றால் தேவனுடைய வார்த்தை அவர்களிடத்தில் இல்லை. இவர்கள் யாவரும் தங்கள் வயிற்றுப்பிழைப்புக்காகவே ஊழியம் என்ற பெயரில் ஒரு தொழிலை செய்து வருகிறார்கள். ஆதலால் தான் இவர்களது சபையானது சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமாக இல்லை. இவர்கள் கிறிஸ்துவின் மணவாட்டியை பக்திவிருத்தி அடைய செய்யமுடியாது என்பது 100% உண்மை. பாஸ்டர் ஐசக் வசந்தகுமார், பாஸ்டர் சாமுவேல், பாஸ்டர் பி.எம்.எ. சாமி போன்றோர்களது சபைகளும் இதற்கு விதிவிலக்கு அல்ல. இவை அனைத்தும் ஒரே குட்டையில் ஊரிய மட்டைகள் தான். இவர்களிடத்தில் மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாய் இருக்கின்றன. கீழ்கண்ட கிரியைகள் இந்த மாம்சத்துக்குரியவர்களிடத்தில் காணப்படுகிறது. (1) விபச்சாரம், (2) வேசித்தனம், (3) அசுத்தம் (4) காமவிகாரம், (5) விக்கிரகாராதனை, (6) பில்லிசூனியம் (7) பகைகள் (8) விரோதங்கள், (9) வைராக்கியங்கள், (10) கோபங்கள் (11) சண்டைகள் (12) பிரிவினைகள் (13)மார்க்கபேதங்கள் (14)பொறாமைகள், (15)கொலைகள், (16)வெறிகள் (17)களியாட்டங்கள். இத்தனை கிரியைகளும் மாம்சத்துக்குரிய கிறிஸ்தவர்களிடம் காணப்படும் ஒன்றாக இருக்கிறது. இதை யாரும் மறுக்கமுடியாது.

23. **ஆவிக்குரியவர்கள் :** முதலாவது இவர்கள் புதிதான ஜீவன் உள்ளவர்களாய் நடந்துக்கொள்ளும்படிக்கு கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே, கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்தெழுந்தவர்கள்.

பாவத்திற்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டவர்கள். (ரோ.6:3-7) இதன்பின் உள்ளத்திலே புதிதான ஆவி உள்ளவர்களாய் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொண்டவர்கள். (எபே.4:24,25, கொலோ.3:10) ஆதலால் இவர்கள் மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டவர்கள். (யோ.5:24) ஏனெனில் தேவனிடத்திலிருந்து அதாவது தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியை பெற்றவர்கள். (1கொரி.2:12) இவர்கள் ஜலத்தினாலும் ஆவியினாலும் மறுபடியும் பிறந்தவர்கள். (யோ.3:5) கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஜலத்தினால் பிறந்து, பாவமன்னிப்பை பெறுவது உங்களை உடன் விசுவாசத்தில் உள்ள ஜனங்களுடன் ஐக்கியத்தில் கொண்டுவருகிறது. ஆனால் பரிசுத்த ஆவியினால் பிறப்பது உங்களை கிறிஸ்துவின் காணக்கூடாத சரீரத்தில் (Mystical Body) அவயவமாக்குகிறது. அடுத்து கவனியுங்கள் மறுபிறப்பு மற்றும் பரிசுத்தஆவியின் அபிஷேகம் இரண்டும் இரு வித்தியாசமான அனுபவம். நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் பெற்ற ஞானஸ்நானத்தின் மூலம் மறுபடியும் பிறந்துவிட்டீர்கள். ஆனால் நீங்கள் மறுபடியும் பிறந்தவுடன், உங்களை இயக்க, உங்களை செயல்படுத்த ஒரு சக்தி தேவைப்படுகிறது. (அப்.1:8) இது உங்களுக்குள் தேவன் வாசம் பண்ணுதல். (யோ.14:17-19) உலகம் அந்த சத்திய ஆவியானவரை காணாமலும், அறியாமலும் இருக்கிறபடியால் அவரை பெற்றுக்கொள்ள மாட்டாது. ஆனால் அவர் உங்களுக்குள்ளே வாசம் பண்ணி, உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள். உங்களிடத்தில் வருவேன். (யோ.14:18) இந்த வாக்குதத்தம் தான் பெந்தெகொஸ்தே நாளன்று நிறைவேறியது.(அப்.2:4)

24. இப்பொழுது பரிசுத்த ஆவியின் சுபாவம்தான் உங்கள் ஆத்துமா. Nature of the spirit is soul இது முத்திரை. (எபே.4:30) இது : நான் இனி நான் அல்ல, கிறிஸ்து என்னில் (கலா.2:20) இப்பொழுது இவர்கள் இயேசு கிறிஸ்துவின் தெய்வீக, திவ்விய, சுபாவத்தில் பங்குகொண்டுள்ளவர்கள். (2பேது.1:4) அதாவது (அ) விசுவாசம்-Faith, (ஆ) வல்லமை-Virtue, (இ) ஞானம்-Knowledge, (ஈ) தன்னடக்கம்-Selfcontrol, (உ) பொறுமை-Patience, (ஊ) தேவபக்தி-Godliness, (எ) சகோதர சிநேகம்-Brotherly kindness. இந்த சுபாவங்களைக்கொண்டுதான் ஒருவன் தேவனை அறியமுடியும். (1கொரி.2:11) இவர்கள் பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தையை பேசுகிறார்கள். (1கொரி.11:13) அதாவது பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியைக்கொண்டு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்கிறார்கள். (1பேது.1:12) இவர்கள் ஸ்தாபன சபையில் உள்ள அந்நிய ஆவிகளைக்கொண்டு சுவிசேஷத்தை பிரசங்கிப்பது இல்லை. இவர்கள் ஸ்தாபன சபைகளின் வேதாகமகல்லூரிகளில் உள்ள இப்பிரபஞ்சத்தின் ஆவியைக்கொண்டு பிரசங்கிப்பது இல்லை. ஸ்தாபனசபை, அதன் முதன்மை பாஸ்டர் போன்றவர்களிடம் காணப்படும் உலகத்தின் ஆவியைக்கொண்டு பிரசங்கிப்பதும் இல்லை. இவர்கள் மற்றவர்களால் ஆராய்ந்து நிதானிக்க முடியாதவர்கள். (1கொரி.11:16) மாறாக இவர்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறவர்கள். (1கொரி.11:15) இவர்களிடம் ஆவியின் கனிகளாகிய (1)அன்பு, (2)சந்தோஷம், (3)சமாதானம், (4)நீடியபொறுமை, (5)தயவு, (6)நற்குணம், (7)விசுவாசம், (8)சாந்தம், (9)இச்சையடக்கம் கண்டிப்பாக காணப்படும். கிறிஸ்துவினுடையவர்களாகிய இவர்கள் தங்கள் மாம்சத்தையும், அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். ஆவிக்கேற்றபடி நடக்கிறவர்கள். (கலா.5:22-25)

25. **ஆவிக்குரியவர்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறார்கள். இது குறித்து உங்கள் சிந்தனைக்கு :**

(அ) ஆட்டுக்குட்டியானவர் அந்த மீட்பின் புத்தகத்தை முற்றிலுமாக திறப்பார் என்னும் தெய்வீக வாக்குதத்தம் நமக்கு உண்டு. நாம் வாழும் கடைசி நாட்களில் ஆட்டுக்குட்டியானவர் அந்த முத்திரைகளை உடைப்பார். ஆட்டுக்குட்டியானவர் புத்தகத்தை எடுத்து முத்திரைகளை உடைக்கும் வரை அதனுள் இருக்கும் ரகசியம் வெளிப்படாது. (பத்தி.53) அந்த புத்தகத்தை வியாக்கியானம் செய்ய எந்த ஸ்தாபனத்திற்கும் உரிமை இல்லை. அதை வியாக்கியானம் செய்ய எந்த மனிதனுக்கும் உரிமை இல்லை. ஆட்டுக்குட்டியானவர் மாத்திமே அதை வியாக்கியானம் செய்ய முடியும்...... அது வெளிப்படுத்தப்படவில்லை. (பத்தி.54) **சபையின் காலங்களும், ஸ்தாபனங்களின் காலங்களும் முடிவுபெற்ற பின்னரே அந்த ரகசியம் வெளிப்படும். இனிமேல் காலம் செல்லாது. சபையின் காலங்களும், ஸ்தாபனங்களின் காலங்களும் முடிவுப்பெற்ற பின்னரே அது வெளிப்படுத்தப்படும். (பத்தி.55) ஆனால் இவைகளின் காலம் முடிவு பெற்றவுடன், ஏழாம் தூதனுடைய சத்தம் முழங்கும் என்றும், அவ்வமையம் இந்த புஸ்தகத்தின் அர்த்தம் வெளிப்படும் என்றும் தேவன் வாக்களித்துள்ளார்.** (பத்தி.57) (ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு, ஏழு சபைக்காலங்களுக்கும், ஏழு முத்திரைகளுக்கும் இடையே உள்ள பிளவு, வில்லியம் பிரன்ஹாம் குட்நியுஸ் சொசைட்டி புதியபதிப்பு பக்கம்.126,127 பத்தி.53-57 செய்தி நாள்.17-3-1963.) ஏழு முத்திரைகளினால் முத்தரிக்கப்பட்ட புத்தகம் உடைக்கப்பட்டு, திறக்கப்பட்டு, அதன் இரகசியங்கள் நமக்கு 1963 மார்ச் மாதம் முதல் வெளிப்படுத்தப்பட்டது. **அப்படியானால் மார்ச் 1963க்கு முன்பே சபையின் காலங்களும் ஸ்தாபனங்களின் காலங்களும் முடிந்துவிட்டதா என்ற கேள்வி எழும்புகிறது.** மேலும் கே.ப.391-ல் பத்தி.74, பக்கம்.31 நாள்.30-8-1964 இந்த லவோதிக்கேயா, அது முடிவடையவில்லை. அது முடிவடைந்தால் சபை போய்விடும். சபை உள்ளவரைக்கும் அது முடியவில்லை என்கிறார். நீங்கள் ஆவிக்குரியவர்களாய் இருப்பீர்களானால் இது குறித்து தியானியுங்கள். சகோ பிரன்ஹாமின் இந்த அறிக்கை சற்று ஒன்றுக்கொன்று முரண்பாடாக தோன்றவில்லையா? ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் நிதானிக்கிறான்.

(ஆ) பின்பு பலமுள்ள வேறொரு தூதன் வானத்திலிருந்து இறங்கிவரக்கண்டேன், மேகம் அவனை சூழ்ந்திருந்தது. அவனுடைய சிரசின் மேல் வானவில் இருந்தது. அது கிறிஸ்து என்று விளங்கும். அவர் பழைய ஏற்பாட்டின் உடன்படிக்கையின் தூதன். அவர் இப்பொழுது (வெளி.10:1) யூதர்களிடம் நேரிடையாக வருகிறார். ஏனெனில் சபை அப்பொழுது ஏற்கெனவே எடுக்கப்படவிட்டது.... இப்பொழுது அவர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு செய்தியாளன், தூதனாக வருகிறார். **சபை ஏற்கெனவே எடுக்கப்பட்டுவிட்டது. அல்லது அது எடுக்கப்பட இருக்கிறது.** அவர் தமது சபைக்கு வருகிறார். (பத்தி.29-31) அந்த முத்திரைகள் உடைக்கப்பட்டு தேவஇரகசியம் வெளிப்படுகையில் அந்த தூதன், அந்த செய்தியாளன் கிறிஸ்து கீழே இறங்கி வந்து தம்முடைய பாதத்தை பூமியின் மேலும் சமுத்திரத்தின் மேலும் வைக்கிறார். (பத்தி.41) தேவஇரகசியம் யாவும் நிறைவேறி முத்திரைகள் உடைக்கப்பட்டு இனி காலம் செல்லாது என்று சொல்லப்படவேண்டிய சமயத்தில் அவர் 10 அதிகாரத்தில் கூறப்பட்ட வண்ணம் மறுபடியும் இறங்கி வருகிறார். அவர் இறங்கி வந்து ஏழாம் தூதன் எக்காளம் ஊதப்போகிறபோது தேவ இரகசியம் நிறைவேறும் என்கிறார். ஆகையால் அந்த தூதன் பிரத்தியட்சமாவதற்கு சமயம் வந்துவிட்டது (பத்தி.47) (ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு, ஏழு சபைக்காலங்களுக்கும், ஏழு முத்திரைகளுக்கும் இடையே உள்ள பிளவு (பக்கம்.120) சபை ஏற்கெனவே எடுக்கப்பட்டுவிட்டது அல்லது எடுக்கப்பட இருக்கிறது. இது ஒரு சரியான விளக்கம் அல்ல. தடுமாற்றம். வெளி.10:1 தூதன் வருகை முத்திரைகள் உடைக்கப்பட்டு, தேவஇரகசியம் வெளிப்படுகையில் அல்லது தேவஇரகசியம் யாவும் நிறைவேறி, முத்திரைகள் உடைக்கப்பட்ட பின்பா என்பதில் தடுமாற்றம். நான் எதற்கெடுத்தாலும் பிரன்ஹாம் பிரன்ஹாம் என்று கூச்சலிட்டு செய்தியை கறைப்படுத்தும் அந்த பிசாசின் கூட்டத்தை சேர்ந்தவன் அல்ல. மாறாக நான் ஆவிக்குரியவன். எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறவன். நான் குருடர்களுக்கு வழிகாட்டும் குருடன் அல்ல. மாறாக பார்வையுள்ளோர்களுக்கு வழிகாட்டும் பார்வையாளன்.

(இ) எல்லாவற்றிற்கும் இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் தேவை. ஆதலால் மீண்டும் ஒரு எடுத்துக்காட்டு. ஏழாம் முத்திரையின் முடிவில் இந்த காலத்துடன் எல்லாமே முடிவடைகின்றன. சபையின் காலங்களின் முடிவும் அதுவாகும். (ஏழாம் முத்திரை பக்கம்.942

பத்தி.233) அப்படியானால் சபையின் காலங்கள் நான்காம் முத்திரையோடு, மணவாட்டி எடுத்துக்கொள்ளப்படுதலோடு முடிவடைவதில்லையா? அல்லது சபையின் காலங்கள் ஏழாம் முத்திரை வரை நீடிக்குமா? பிரியமானவர்களே இவ்வாறாக நான் அநேக சம்பவங்களை உங்கள் சிந்தனைக்கு எடுத்து எழுதலாம். ஆதலால் எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து நலமானதை பற்றிக்கொள்ளுங்கள். குருட்டுதனமாக கோஷம் போடாதீர்கள். அது வஞ்சனை / பிசாசு. ஏழாம்சபைக்கால தூதனின் செய்தி, செய்தி என்று கூறிக்கொண்டு பிசாசின் நடமாட்டம் அதிகம். ஆதலால் முதலாவது தேவனுடைய வார்த்தையை / திருவசனத்தை தியானியுங்கள். அத்துடன் செய்தியை தியானித்து செய்தியில் சரியானதை பற்றிக்கொள்ளுங்கள். மற்றபடி புரிந்துக்கொள்ள முடியவில்லை எனக்கூறி அதை அப்படியே விட்டுவிடுங்கள். தூதனையும் செய்தியையும் விட்டுவிடாதீர்கள். உதாசினப்படுத்தாதீர்கள், முதுகுக்குபின் எறிந்து விடாதீர்கள். அதில் ஏழாம் சபைகாலத்திற்குரிய ஆகாரம் உண்டு. எடுத்துக்கொள்ளபடுதலுக்குரிய விசுவாசம் உண்டு.

26. பிரியமானவர்களே எனது 38 ஆண்டுக்கால ஊழியத்தில், ஏழாம் சபைக்கால தூதனின் செய்தியில் இருக்கிறோம் என்றுகூறும் சபைகளை தமிழ்நாட்டில் பல இடங்களில் கண்டிருக்கிறேன். இதோ எல்லாம் மாயையும், மனதுக்கு சஞ்சலமுமாய் இருக்கிறது. செய்தி எடுத்துச் செல்லும் ஊழியர்களில் பெரும்பாலானோர் கள்ள கபடம் உள்ள வேலையாட்களாகவே இருக்கிறார்கள். பொருளாசையை பின்பற்றி செயல்படுகிறார்கள். அங்கும் இங்கும் ஓடுகிறார்கள். எதற்கு? பணத்திற்காகவே! அன்றும் இன்றும் என்னால் சத்தியத்திற்கு தூணும், ஆதாரமாயுள்ள ஒரு சபையை கூட காணமுடியவில்லை.

27. 2016 ஜீலை மாதம் நான்காவது வாரத்தில் எனக்கு மிக்க அறிமுகமான ஒரு சகோதரன் ஆதி 9 அதி 20-27 வசனங்களை தியானிக்கும்படி கூறினார். பின் சில நாட்கள் கழித்து : காம் செய்த தவறினால் அவன் மகன் கானான் சபிக்கப்பட்டான். இதுக்குறித்து உங்கள் கருத்து என்ன என்று கேட்டார். நான் காம் செய்த தவறுக்கு அவன் மகன் சபிக்கப்படுவது தேவநீதி கிடையாது. தகப்பன், மகன் இருவரும் உயிரோடு இருக்கிறார்கள். தகப்பன் செய்த தவறுக்கு மகன் ஏன் தண்டிக்கப்படவேண்டும்? சகோ DGS செய்த தவறுக்கு அவருடைய மகள் ஏன் தண்டிக்கப்படவேண்டும்? ஆதலால் காம் தான் சபிக்கப்பட்டிருக்க வேண்டும். கானான் என்பது ஒரு தவறாக இருக்கலாம் என்றேன். ஆனால் அவர் அது அப்படியல்ல, ஒருவன் செய்த குற்றத்தை பல தலைமுறைகளில் அவன் குடும்பத்தாரிடத்தில் தேவன் நியாயம் விசாரிப்பார் என்றார். ஆதலால் தகப்பன் செய்த குற்றத்திற்கு மறுதலைமுறையாகிய அவன் மகன் மீது ஆக்கினை வரலாம் என்றார். என்னால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. முடிவாக இக்காலத்திற்குரிய செய்தி இது குறித்து என்ன கூறுகிறது என்று பார்க்கலாம் என்றார். கே.ப.22 பத்தி.158 ல் பதில் கிடைத்தது. அதில் நோவா திராட்சை ரசத்தைக்குடித்து, வெறிக்கொண்டு தன் வஸ்திரம் விலகிப்படுத்திருந்தான். நம்முடையவர்களோ குடித்து வெறித்து ரோட்டில் நிர்வாணமாக படுத்திருக்கிறார்கள். அதற்கு நோவா எவ்வளவோ நலம். அவன் தன் வீட்டில் தான் படுத்திருந்தான். இப்பொழுது அங்கு தெய்வச்செயலாக சென்ற காம் தன் தகப்பனுடைய நிர்வாணத்தைக்கண்டு விட்டான். அவன் அதை மூடி மறைத்திருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு அவன் தன் சகோதரர்களாகிய சேமுக்கும், யாப்பேத்துக்கும் தெரிவித்து, சம்பவத்தை பெரிதுப்படுத்தி பிரபலப்படுத்தினான். ஆதலால் தான் காம் சபிக்கப்பட்டான். இதன் பின்னும் அந்த சகோதரன் தன் தவறை திருத்திக்கொள்ளும் பக்குவத்தில் இல்லை. அதுக்குறித்து ஆராய்ந்து பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டார். பாருங்கள் நாம் ஆவிக்குரியதாக இருப்பதால் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கவேண்டும். ஒன்றை அப்படியே ஏற்றுக்கொள்வது இல்லை. அது சரியா அல்லது தவறா என்று பகுத்தறிந்து நிதானிக்கவேண்டியவர்களாய் இருக்கிறோம்.

28. ஆக தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை யாரும் வஞ்சிக்க முடியாது. தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக காரியங்கள் நடக்கும். ஆனாலும் அது அவர்களை வஞ்சிக்க முடியாது. தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் தேவனுடைய வார்த்தையிலும், அந்தந்த சபைகாலத்திற்குரிய தூதனுடைய செய்தியிலும் நிலைத்திருப்பார்கள். களையும், கோதுமை போல் காணப்படுவதால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் மாத்திரமே எது களை, எது கோதுமை என்று பகுத்தறிய, கண்டறியமுடியும். மேலும் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களுடைய ஊழியத்தை யாரும் தடைபண்ணமுடியாது. யாரும் தெரிந்துக்கொள்ளப்பட்டவனுடைய ஊழியத்தை தாங்குகிறார்களோ, இல்லையோ: ஞானநன்மைகளை பெறுகிறவர்கள் சரீர நன்மைகளை கொடுக்கிறார்களோ, இல்லையோ: எந்த சபையாவது (பண்டகசாலை) கர்த்தருக்குரிய தசமபாகத்தின் பங்கை பகிர்ந்து கொடுக்கிறதோ, இல்லையோ: யாரும் அவனுடைய செய்தியை ஏற்றுக்கொள்கிறார்களோ, இல்லையோ: யாரும் அவனை போற்றுகிறார்களோ அல்லது தூற்றுகிறார்களோ அது குறித்து அவனுக்கு கவலை இல்லை. அவன் தன் ஊழியத்தின் பாதையில் தன் பணியை செய்துகொண்டே முன்னேறுகிறான். அதை யாரும் தடைப்பண்ண முடியாது, தடைப்படாது. தேவன் நியமித்த காலம் வரை அவன் தடைகளை எதிர்த்துக்கொண்டு, பிரச்சனைகளை சமாளித்து வீரநடை நடந்துக்கொண்டு செல்லுகிறான்.

29. முடிவாக ஜென்மசுபாவமான மனிதர்களின் பெயர்கள் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்படவே இல்லை. அவைகள் புஸ்தகங்களிலே எழுதப்பட்டுள்ளது. அவர்கள் பாவிகளாக பிறந்து பாவிகளாகவே மரிக்கிறார்கள். மாம்சத்துக்குரியவர்களின் பெயர்கள் ஜீவபுஸ்தகத்தில் காணப்பட்டு சிலர் பெயர் தக்கவைக்கப்படுகிறது. சிலர் பெயர் கிறுக்கிப்போடப்படுகிறது. ஆவிக்குரியவர்கள் பெயர் ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவபுஸ்தகத்தில் காணப்படுகிறது. இவர்களுடைய பெயர்கள் எக்காரணம் கொண்டும் எந்த சூழ்நிலையிலும் எடுத்துப்போடப்படாது. இவைகளை உங்களுக்கு எழுத என் உள்ளத்தில் ஒரு தூண்டுதலை வைத்த தேவன், மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென். கர்த்தராகிய இயேசுவே, வாரும். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக. ஆமென்.

**அக்டோபர் 2016.**

**கிறிஸ்துவின் அன்பில்**
**சகோ.காலேப் யோசுவா**

If undelivered
Please return to :
Caleb Joshua
11/2, Upstair, Periyaar Nagar,
Opp.E.B, Senneerkuppam,
Poonamallee P.O,
Chennai – 600 056.

**PRINTED BOOK**
Under Clause No. 128 P.O. Guide Rules
G/RNP/Dlgs/16 dated @ Tambaram the 04.04.2016.
Rs. One per every 100 gms
To : Dr, Rev, Pr, Bro, Sis.........................................

Owned and Published by Caleb Joshua
from 11/2, Upstair, Periyaar Nagar,
Opp.E.B, Senneerkuppam,
Poonamallee P.O, Chennai – 600 056.
Printed by V.R. Sermakani, Sakthi Process, 2/1F Kummalamman Kovil St, Tondiarpet, Chennai – 600 081.
Ph: 044- 25956006. Editor : Caleb Joshua.